12 ஆவது ஆண்டில்

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

# விளம்பரம்
VLAMBARAM™

☎ 416-282-8059
Fax 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 12 | JANUARY 01, 2002 | பாலம் 01

நாம் நம்மையே திருத்தினால்.... (பக்கம் - 11)
ஆரோக்கிய வாழ்விற்குத் தவிர்க்க வேண்டியவை.... (பக்கம்- 04)
கையெழுத்தில் மோசடி செய்பவர்கள்..... (பக்கம் - 02)
மணம் செய்வது மருந்தாகுமா.... (பக்கம்-09)
பூமியின் சொந்தக்காரர்கள் மனிதர்களா? (பக்கம் - 10)
25 வெள்ளிக்காசிற்கு காட்டிக் கொடுத்த யூதாஸ் (பக்கம் - 12)
மறந்ததும் மறவாத விளையாட்டு நினைவுகள் (பக்கம் - 06)
வருமானப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து கொள்ள (பக்கம்-05)
படைப்பாளி, பார்வையாளன், தொழில்நுட்பம் (பக்கம்-08)

## புதுவருட நல்வாழ்த்துக்கள்

அன்பர்கள்
நண்பர்கள்
வாசகர்கள்
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
-Vlambaram Publication

## உங்களுடன் ஒரு நிமிடம்

வணக்கம்!

ஒரு சந்ததியின் தொடக்கம் இதுவே ஒரு பிரிவின் இறுதி வார்த்தை. சொல்வதில் பெருமை கொள்கின்றோம். காலம் கடக்கின்றது. நேரம் தொடர்கின்றது. பல செயல்கள் நிறைவேறுகின்றன. மனித இனம் பல இன்னல்களிற்குள்ளும் நெருக்கடிகளிற்குள்ளும் சென்று வருகின்றது. காலதேவதை நல்ல வழிகளில் அனைத்து தங்கள் பணியான நேரத்தை நல்ல செயல்களிற்கு பயன்பட ஆக்கபூர்வமான கட்டுரைகள், வரலாறுகள், ஆக்கங்கள், கவிதைகள், நொடிகள், ஆரோக்கியக் கட்டுரைகள், விளையாட்டுச் செய்திகள், சிந்தனைக்குச் செய்திகள், விஞ்ஞானக் கட்டுரைகள், மற்றும் மனிதம் வளரத் தேவையான ஆக்கங்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் எமது பத்திரிகை அச்சு ஏற உழைக்கும் சகலரிற்கும் எமது இதய பூர்வமான நன்றியை தெரிவிக்கின்றோம்.

பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருக்கும் வியாபார இயக்குனர்கள், வாசக நண்பர்கள், ஏனைய வழிகளில் உதவி புரியும் நண்பர்களிற்கும் எமது நன்றி. காலத்திற்கேற்ப கட்டுரைகளையும் சம்பந்தமான ஆக்கங்களையும் தருவதே எமது நோக்கம். பலர் எமது நோக்கத்தை மதிப்பதுடன், நோக்கத்தால் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்ய உந்துகிறார்கள். நீண்டகாலம் அவர்களின் வேண்டுகோளிற்கு செவிமடுக்காமல் இருக்க முடியாது.

எனவே நோக்கங்களில் சில மாற்றங்களை இந்த ஆண்டில் செய்வது எனத் தீர்மானித்துள்ளோம். மாற்றங்கள் ஏற்படும் போது நிச்சயம் நல்ல மாற்றங்களாகவே இருக்கும். பலரினாலும் ஏற்கக் கூடியதாகவே இருக்கும்.

விளம்பரம் தொடங்கி பன்னிரண்டு வருடங்களாகின்ற காலத்தில் எம் வளர்ச்சி போதுமானதா? இந்தக் கேள்விக்கு ஒரு இடைக்கால முற்றுப்புள்ளி வைக்க இவ் வருடத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய காலகட்டமிது. மாற்றங்கள், முன்னேற்றமாக இருந்தால் மாற்றங்கள் தொடரும்.... (தொடர்ச்சி 3ஆம் பக்கம்)





RE/MAX
Crossroads Realty Inc.
வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்
Raja M. Mahendran, P.Eng.
Sales Representative
MEMBER OF RE/MAX HALL OF FAME
Office: (416) 491-4002
Pager (416) 589-4270
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

Singapore Communication
HAPPY HOLIDAYS
Limited time offer · Reliable & Friendly Service
FREE TIME PLAN $25.00
50 Min. (Free Day Time) Add. 30 cts
Mon - Thu 6PM - 8 AM Free · Fri 6PM - Mon AM Free
Every Day (12:00 -1pm) free C/W, C/F & Free Activation
More Info: Pl.Call: Sathi / Raj
Office: (416) 745-2378 (416) 740-5292
5010 Steeles Ave.., W., Unit 17ABC
Kipling & Steeles - Deliver Arranged



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

Auto
Home
R.R.S.P
Life
Disability
Mutual Fund
Group Insurance
Child Education
Travel · Business
London Life
Liberty Mutual
© 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975
4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (95)



**-விஜே குலத்துங்கம்**

கடந்த சில இதழ்களில் பார்த்து வந்த குற்றவியலில் ஒரு பெரிய பகுதி கையெழுத்துப் பற்றியதாகும். காசோலையில் கையெழுத்து மோசடி. மிரட்டல் அல்லது பணயம் வைத்து எழுதும் கடிதங்கள். அநாமதேயக் கடிதங்கள். ஆவணங்களில் மோசடி இப்படி பல இடங்களில் கையெழுத்து மோசடிகள் நடைபெறுகின்றன.

கையெழுத்துக்கள் கைகளிலும் விரல்களிலும் உள்ள தசைநார்கள் பலவற்றின் ஒன்று சேர்ந்த இயக்கத்தின் விளைவினால் உண்டாகின்றது. இது குறிப்பிட்ட ஒருவருக்கு தனித்துவமானது. ஒருவர் எப்படி மாற்றி எழுதினாலும் கையெழுத்து நிபுணர் ஒருவர் இதை இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார். சாதாரணமாக ஒருவரின் கையெழுத்தை உறுதி செய்வதற்காக அதை ஒப்பிட்டுப் பார்க்கக் குறிப்பிட்ட நபர்களின் வேறு உண்மையான கையெழுத்துள்ள ஆவணங்கள் தேவைப்படும். இவை இரண்டு வகைப்படும். ஒன்று *Natural Standards* அல்லது இயற்கை நியமங்கள் எனப்படும். இவை ஏற்கனவே எழுதப்பட்ட காசோலைகள். கடிதங்கள் போன்றவை. இரண்டாவது வகை *Requested Standards* அல்லது கேட்டுப் பெற்ற ஆவணங்கள் ஆகும். இயற்கை நியமங்கள் ஆன பழைய காசோலைகள். கடிதங்களும் ஒருவரின் சாதாரண உண்மையான கையெழுத்துக்களைக் கொண்டிருக்கும்.

சில சமயங்களில் பொய் கையெழுத்து போடுகின்றவர்கள் சில விடயங்களை கவனிக்கத் தவறிவிடுவார்கள் உதாரணமாக காசோலையை மோசடிக்காக நிரப்புவர்கள் கையெழுத்தை கவனமாகப் போடுவார்கள். ஆனால் திகதியைச் சரியாக கவனிக்கத் தவறிவிடுவார்கள். சிலர் திகதியில் இரண்டு இலக்க வருடத்தையும் சிலர் நான்கு இலக்க வருடத்தையும் எழுதுவார்கள். சிலர் மாதத்தை இலக்கத்தினாலும் சிலர் எழுத்துக்களினாலும் எழுதுவார்கள். சிலர் மாதத்தை முதலாவதாகவும் சிலர் இரண்டாவதாகவும் குறிப்பிடுவார்கள். கையெழுத்தை மோசடி செய்பவர்கள். திகதயை கவனிக்காமல் விட்டு விடுவார்கள். இதே போன்று இலக்கங்களிலும் தவறை விட்டு விடலாம்.

ஒருவரின் கையெழுத்தை சோதிப்பதற்காக. அவரிடம் சில ஆவணங்கள் எழுதிப் பெறவேண்டும். இப்படியாக கேட்டுப் பெறும் போது சில விடயங்கள் கவனிக்கப்படும்.

* எழுதுபவரிடம் மூலப் பிரதிகளை காட்டக் கூடாது
* எழுதிபவரை பார்த்து எழுத விடாது. விடயங்களை வாயால் சொல்லி எழுத விடவேண்டும். முற்றுப் புள்ளி, கேள்விக்குறி. ஆச்சரியக் குறி, கமா போன்றவற்றைக் கூறாமல் விடவேண்டும்.
* கையெழுத்தாயின் பல கையெழுத்துகளை போடச் சொல்ல வேண்டும். கையெழுத்துக்களை ஒன்றின் கீழ் ஒன்று போடவிடாமல், ஒவ்வொரு கையெழுத்தையும் வெவ்வேறு தாள்களில் போடச் சொல்ல வேண்டும். ஒன்றை எழுதும் போது, மற்றையதை பார்க்க விடக்கூடாது.
* பல விதமாக ஒரு விடயத்தை எழுதிப் பெறவேண்டும். சாதாரணமாக எழுதும் படியும் தனித்தனியே எழுதும் படியும் தொடுத்து எழுதும் படியும் கூற வேண்டும்.
* எழுதுபவரை யோசித்து எழுதவிடாது விரைவாக எழுதச் சொல்ல வேண்டும்.

எவ்வளவு தான் கவனமாக எழுதினாலும் கையெழுத்து நிபுணர்கள் இவற்றை பொய்யோ. மெய்யோ என்று இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார்கள்.

பொய்க் கையெழுத்தைவிட இருக்கும் எழுத்துக்கள். எண்களை மாற்றும் அலுவல்கள் கூட நடைபெறும். உதாரணமாக '3' என்ற இலக்கம். இலகுவாக '8' ஆக மாற்றப்படலாம் '1' என்ற இலக்கம் 4 ஆக மாற்றப்படலாம். இப்படி மாற்றப்பட்டவையையும் *Ink Analysis* எனப்படும் பேனா மைகளை ஆராய்வதன் மூலம் கண்டு பிடிக்கப்படும். எழுத்துக்களை மாற்றும் பொழுது முதலில் எழுதப்பட்ட எழுத்தில் உள்ள மையும் பின்னர் எழுதப்பட்ட மையும் வேறுபட்டதால். இவை கண்டுபிடிக்கப்படலாம். இந்த மைகள் *Infra Red* கதிர்கள் மூலமும் *Dichroic Filter* மூலமும் கண்டுபிடிக்கப்படும். *Dichroic Filter* முறையில் இரண்டு நிறங்களைக் கொண்ட ஜெலட்டீன் வடிகளினூடாக இந்த எழுத்துக்களை பிரகாசமான ஒளியில் பார்க்கும் போது. எழுத்துக்களில் உள்ள வித்தியாசமான மைகள் தெளிவாகத் தெரியும்.

இதைவிட இரசாயனப் பகுப்பு மூலமாகவும் தெளிவாக மைகளில் உள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்கலாம். ஆனால் இதன் போது ஆவணங்களுக்கு பாதிப்பு நேரிடலாம். அதனால் மிகச் சிறியளவு குண்டூசியின் அளவிற்கு துளையிட்டு, மாதிரிகளை எடுத்து அதனை ஆராய்வார்கள். இந்த இரசாயனப் பகுப்பு மூலம் இந்த மை எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது, எந்த வகைப் பேனாவால் எழுதப்பட்டது போன்றவற்றை கண்டுபிடிக்கலாம். ஒரு குறிப்பிட்ட ஆவணத்தில் அந்த மை எவ்வளவு காலம் உள்ளது என்பதையும் அறியலாம். ஒரே மையை பாவித்து எழுதப்பட்டாலும் எழுத்துக்களுக்கு இடையேயுள்ள கால வேறுபாட்டையும் கண்டறியலாம்.

கையெழுத்து மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட இன்னுமொரு விடயம் *'Indented Writing'* எனப்படும். சாதாரணமாக எழுதும் போது நீங்கள் பல தாள்கள் உள்ள ஒரு கொப்பியிலோ, லெற்றர் பாட் இலோ எழுதும் போது அதன் கீழேயுள்ள 3.4 பக்கங்களில் அந்த எழுத்துக்களின் பதிவுகள் இருக்கும். இவை கண்ணுக்கு தெரியமாட்டாது. ஆனால் இவை புகைப்படத்தின் மூலமாகவோ அல்லது *ESDA* எனப்படும் *Electric Detection Apparatus* என்ற கருவியினாலோ கண்டுபிடிக்கப்படலாம். இந்த கருவியின் மூலம் எழுதிய காகிதத்தின் கீழேயுள்ள 3.4 பக்கங்களுக்கு மேல் உள்ள பதிவுகளைக் கண்டறியலாம். இந்த பக்கங்கள் ஒரு செலோபேன் துண்டினால் அழுத்தி மூடப்பட்டு ஒரு *Vacuum* இயந்திரத்தின் மூலம் பத்திரம் செலோபேன் துண்டும் இறுக்கமாக அழுத்தப்படும். பின்பு இதற்கு நிலை மின்சக்தி அல்லது *Static Electricity* கொடுக்கப்படும். இதன் மேல் போட்டோ கொப்பி இயந்திரத்தில் உபயோகிக்கப்படும் *Toner* எனப்படும் கறுப்புத் தூளை தூவுவதன் மூலம் எழுத்துக்கள் பதிவான இடத்தில் அவை படிவதன் மூலம் எழுத்துக்கள் இலகுவாக வாசிக்கப்படலாம்.

எனவே எந்தக் குற்றம் என்றாலும் காலம் தாழ்த்தப்பட்டாலும் ஒரு காலத்தில் இவை கண்டுபிடிக்கப்படலாம். அந்த அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்றது. குற்றம் செய்தவர் தான் பெரிய சாமர்த்தியசாலி என நினைத்தாலும் ஏதோ ஒரு இடத்தில் தவறை இழைத்து விடுவார். அவருக்கு தெரியாத விடயத்தில் கூட இழைக்கும் விடயங்களையெல்லாம் அந்தந்தப் பிரிவைச் சேர்ந்த நிபுணர்கள் கண்டுபிடித்து விடுவாகள்.

**"அறிவும் ஆக்கமும்" கட்டுரையை வாசிக்கும் அன்பர்களுக்கு 2002ஆம் ஆண்டு ஓர் ஆக்க பூர்வமான ஆண்டாக மிளிர எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

❁ ❁ ❁ ❁ ❁

**"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -** *361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2* **என்ற விலாசத்திற்கு அல்லது** wijeyaku@hotmail.com **என்ற முகவரிக்கு** *e-mail* **ஐ எழுதி அனுப்பவும்.**


நியூ மிலேனியத்தில்

ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஐப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

**சிவபாலன்**

**CONTACT: SIVABALAN**
☎: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



IN NEW MILLENNIUM WE ARE ENTERING 10TH YEAR SERVICE IN SCARBOROUGH

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- சிற்றின்பத்துக்கும் பேரின்பத்துக்கும் இடையில் துன்பம் என்னும் பள்ளத்தாக்கு ஒன்று உண்டு. பேரின்பத்துக்குப் போகிறவர்களெல்லாம் அதைக் கடந்தாக வேண்டும்.
- வகையறிந்து கொண்டவனுக்கு ஒவ்வொரு கணப்பொழுதும் நல்ல தருணமே.
- செயற்கரிய செயலைத் துவக்கி வைப்பது. நல்லறிவு. அதை நிறைவேற்றி வைப்பது இடையறாத பேருழைப்பு.
- பணிவுக்கு ஒப்பான அணியில்லை. நீ பணிவுடன் இரு.
- நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்றவாறு பெறுகிறோம்.
- நாம் சம்மதம் கொடுக்கும் அளவுக்கே புறவுலகம் நம்மீது ஆதிக்கம செலுத்துகிறது.
- இப்பொழுது நாம் அடைந்துள்ள நிலையானது இது வரையில் நாம் எண்ணிய எண்ணத்தின் விளைவாம்.

## கனடிய பாடசாலை ....

*(14 ஆம்பக்கத் தொடர்ச்சி)*

பயன்படுத்துகிறார்கள் என்பது மற்றையதோர் வினா இல்லையா? எடுத்துக்காட்டாக, மொழிப் பிரச்சனையால் மாத்திரமே ஏராளமான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் பாடசாலை விடயங்களில் தலையிடவோ அவற்றைப் பகிர்ந்து கொள்ளவோ அன்றேனும் அது விடயமாக ஆலோசனைகள் செய்து வழிகாட்டவோ முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

இம் முக்கியமான கருத்தினை மையமாகக் கொண்டுதான் கல்வியோடு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் பிள்ளைகளை விட பெற்றோரே அதிகம் தெரிந்திருக்கும் வாய்ப்பினை உருவாக்குவது ஆகும். அத்துடன் இதன் மூலம் பெற்றோரே தங்களது பிள்ளைகளின் பாடசாலை விடயங்களை கவனிக்கவும் ஆலோசனைகள், கருத்துக்களைப் பகிரவும் வாய்ப்புக்களை உருவாக்குவது போன்ற விடயங்களை ஆராயப்பட இருக்கிறது.

தொடரும்

## உங்களுடன் ஒரு நிமிடம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகலரும் சகல வசதிகளும் பெற்று நோய் நொடிகள் இன்றி, குன்றாத வளமையும் சலியானத மனமும் பெற்று, அன்பகலாத குடும்பமும் பெற்று வாழ எல்லோரிற்கும் பொதுவான இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

மீண்டும் ஒரு பொழுதில் சந்திக்கும் வரை....

*அன்புடன்*
*நிர்வாகம்*
*உலகதமிழோசை (விளம்பரம்*


## பல்கலைக்கழக, கல்லூரி
### மாணவர்களின்
### ஒன்று கூடல் - 2002

**காலம்:** தை 13, 2002

**மேலதிக தொடர்புகளுக்கு:** www.tamilbulletin.org

பல்கலைக்கழகப்பிரிவு - தமிழர் தேசிய அமைப்பு

☎ : 416 575-9742



## NEW Technology
Security and Sound Inc.

Sale and Repair

Christmas Sale




Start up $79.99 & up

Pioneer DEH-P3300 CD Player Blowout — Sale $254.99



Alarm & Remote Starter Combo — Start up $189.99 & up

Alarm — Start up $89.99 & up

Blaupunkt CD Player — Sale $174.99



Mobil Video DVD Much more...

www.newtechno.net
Tel: 416-335-4070
Shanger Cell (416) 451-4517

We also do any electrical work.
Fax: 416-335-9936

3501 McNicoll Ave., Unit 9, Scarborough, Ont. M1V 2N3

# ஆரோக்கிய வாழ்வு (70)



-N. செல்வசோதி

### தவிர்க்கப்பட வேண்டிய உணவு வகைகள்

**சர்க்கரை சீனி**

நிறம் வெண்மை பெறுவதற்கான பலவிதமான ரசமான பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. இது நமது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்.


**ஊறுகாய்**

இதற்குப் பயன்படுத்தும் காய்கறிகள் கெட்டுவிடாமலிருக்க அதிக உப்பும் எண்ணெய் என்பன பயன்படுத்தப்படுகிறது. இவைகள் உடலுக்கு முறையே முதுமையையும் செரியாத தன்மையையும் தரக் கூடியன.

காப்பி. தேநீர் என்பனவும் அவற்றிலுள்ள இரசாயனத் தன்மையும் உடலுக்கு எந்த விதத்திலும் நன்மை தருவதில்லை.

எண்ணெய் அதிகமாகச் சேர்த்து தயாரிக்கப்படும் உணவுகள் சமிபாட்டுத் தன்மையையும் வாய்வுக் குணத்தையும் தரக்கூடியன.


* சாப்பிட்ட உணவை சில மணி நேரம் கழித்துத் திரும்பவும் உண்ணுவது ஆகாது.
* அதிகமாக இனிப்புப் பொருட்களை உண்பதால் நீரிழிவு நோய் ஏற்படும்.
* அதிக மாமிச உணவுகளை உண்பவர்களுக்கு அசீரணம். மூட்டுவலி மற்றும் உடல் உவாதைகள் ஏற்படும்.



* அதிகமான புளிப்பு உணவை உண்பதால் இரத்தம் கட்டி சோர்வு ஏற்படும்.
* சாப்பிடும் உணவில் அதிகமான உப்பும் கசப்பும் சேர்த்துக் கொண்டால் உடலில் பித்தம் மற்றும் இரத்தக் கொதிப்பு ஏற்படும்.
* மீன் உணவை உண்ட பின்பு உடனடியாக பால், தயிர் போன்றவற்றை உண்ணக் கூடாது. அப்படி சாப்பிடுவதால் உண்ட உணவு திரிந்து விஷமாக மாறி உடலுக்குத் தீமையை விளைவிக்கும்.
* உண்ணும் போது இடையிடையே தண்ணீர் அருந்தக் கூடாது. ஏனெனில வயிற்றில் இரண்டு பங்கு உணவும் ஒரு பங்கு தண்ணீரும் ஒரு பங்கு வெற்றிடமாகவும் இருந்தால்தான் சமிபாடு சிறந்த முறையில் நடைபெறும். மேலும் உண்ணும் உணவு மெல்ல மெல்ல உணவுக் குழலில் சென்று இரைப்பையை அடைந்து சமிபாடு அடைய வேண்டும். இடையிடை தண்ணீர் அருந்துவதால் உணவு விரைவாக இரைப்பை அடைந்து சமிபாடு அடைவதைக் கடினமாக்கும்.
* மலத்தை எப்போதும் அடக்குவது கூடாது. அடக்கினால் அந்தக் கழிவிலிருக்கும் விஷக் கிருமிகள் உடலைத் தாக்க வழி ஏற்படும். ஆகவே தினமும் இரண்டு வேளை இல்லையென்றால் கண்டிப்பாக ஒரு வேளையேனும் மலம் கழிக்க வேண்டும்.
* நமது உடல் உணவு உழைப்பு மறந்தும் தேகப்பயிற்சி போன்றவற்றால் உஷ்ணத்தை அதிக அளவில் உற்பத்தியாக்குகிறது. இதனை சரி செய்து உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்கு வாரம் இரண்டு முறையாவது தலை முழுக்க வேண்டும். அத்துடன் பச்சைக் காய்கறிகள். பழங்கள் போன்றவற்றை உணவாக இடையிடையே உட்கொள்ள வேண்டும்.
* வருடத்திற்கு இரு தடவையாவது சுகபேதி மாத்திரைகளையோ மருந்தினையோ உட்கொண்டு வந்தால் உடலிலுள்ள கழிவுப்பொருட்களும் விஷக் கிருமிகளும் வெளியேறி பலவித நோய்களையும் வராது தடுக்க முடியும்.

❁ ❁ ❁ ❁ ❁ ❁


**ELECTRICAL REPAIRS**



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883



தமிழர் நிர்வாகத்தில்

ஒரு





**EMBASSY**



விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், **(Groceries)**
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் **(Sweets)**
- இலங்கை / இந்திய உணவகம் **(Restaurant)**



சமோசாவிற்கு அழையுங்கள்

**T.P 416-332-0944**

5 SAMOSA $1.00

*Embassy* அமைந்துள்ள இடம்: *FINCH / MIDDLEFIELD,*

*5200 FINCH AVE., SCARBOROUGH.* ☎: (416) 332-8451

# கனடிய பொருளாதாரம்



## கணக்கியல் பொருளியல்

### 2001ஆம் ஆண்டிற்கான வருமானவரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்

கடந்த இதழில் இருந்து உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்வதில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களைப் பற்றி ஆராய்ந்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக இவ் இதழில் உங்கள் வேலைச் சம்பளத்திலிருந்து எவ்வகையான கழிவுகளைக் கழிக்கலாம் என்று ஆராய்வோம்.

1. வேலை சம்பந்தமாக ஏற்படும் போக்குவரத்துச் செலவுகளை உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம். இக் கழிவுகளில் வாகனச் செலவுகள் மட்டும் அண்ணளவாக உங்கள் வாகனங்களை தரித்து நிறுத்துவதற்கு (Parking) செலுத்தும் பணம் மற்றும் ரக்ஸி (Taxi). பேருந்து வண்டி (Bus) என்பவற்றில் செல்வதற்கு செலுத்தும் பணம் என்பவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

2. உங்கள் வதிவு இடத்தில் ஒரு பகுதியை வேலை சம்பந்தமான அலுவல்கள் பார்ப்பதற்கு பாவிக்கின்றீர்கள் என்றால். நீங்கள் செலுத்தும் மாதாந்த வாடகையின் ஒரு பகுதிகயையோ அல்லது வதிவிடம் உங்களுடைய் சொந்த வீடாக இருந்தால், வீடு சம்பந்தமான செலவுகளை உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம். இவ்வாறாக உங்கள் வீடு சம்பந்தமான கழிவுகளில். வீட்டைத் திருத்துவதற்கு (Maintenance) செலவு செய்யும் பணத்தின் ஒரு பகுதி. மற்றும் வீட்டை பாரமரிப்பதற்கு செலுத்தும் பணத்தின் ஒரு பகுதி. அத்துடன் தண்ணீர். மின்சாரம். எரிபொருள் வாயு போன்றவற்றிற்குச் செலுத்தும் பணத்தின் ஒரு பகுதியையும் உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

இதற்கு மேலதிகமாக உங்கள் வீட்டுக் கடனிற்கு (House Mortgage) நீங்கள் செலுத்தும் வட்டியையும் மற்றும் அரசாங்க வீட்டு வரி. வீட்டுப் பாதுகாப்புக் காப்புறுதிக்கு செலுத்தும் பணம் என்பவற்றின் ஒரு பகுதியையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியாதாக இருக்கும்.

3. வேலை சம்பந்தமான விடயங்களில் உங்களது உறவினர்களோ அல்லது வேறு யாரோ உதவி செய்யும் தருணத்தில் அவர்களுக்கு நீங்கள் செலுத்தும் ஊதியத்தை உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.

4. வேலைக்காக நீங்கள் உபயோகிக்கும் பொருட்கள் உதாரணமாக காகிதங்கள். பேனா. பென்சில். தபால் செலவுகள் மற்றும் சிறிய உபகரணங்கள் என்பவற்றையும் உங்கள் வியாபாரத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

5. வேலை சம்பந்தமான சங்கங்களில் சேர்ந்து அவற்றிற்கு செலுத்தும் மாதாந்த அல்லது வருடாந்த பணம். அத்துடன் உங்களது தகைமையை தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக நீங்கள் செலுத்தும் அங்கத்துவப் பணம் என்பவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.

6. உங்களது வேலையைப் பார்ப்பதற்கு பிரத்தியேகமாக ஏதாவது செலவுகள் செய்ய வேண்டி இருந்தால் அவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறாக மேற்குறிப்பிட்ட செலவுகளை வருமானத்தில் இருந்து கழிப்பதற்கு உங்கள் முதலாளியிடம் இருந்து நீங்கள் ஒரு அரசாங்கம் பத்திரத்தைப் பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.


மேற்குறிப்பிட்ட செலவுகளைத் தவிர உங்கள் வேலையை இட்டு வேறு பல செலவுகளையும் நீங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருடாந்தச் சம்பளத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். அவற்றிற்கு யாராவது மேலதிகச் செலவுகளை ஊதியத்தில் இருந்து கழிப்பதற்கு சில நிபந்தனைகள் உள்ளன.

மீண்டும் அடுத்த இதழில் மேலதிகமாக வேறு என்ன செலவுகளை உங்கள் சம்பளத்தில் இருந்து கழிக்கலாம் என்றும் அவற்றுக்கான நிபந்தனைகளை என்ன என்பன பற்றியும் ஆராய்வோம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அதற்கான பதில்களைத் தரக் கூடியதாக இருக்கும். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


**Mark Markandu, CGA**
Certified General Accountant
Tel: 416 290 0946 / 416 834 6660
e-mail: mark.markandu.cga@on.aibn.com

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்.
2002ஆம் ஆண்டிற்கான கலண்டர் வெளிவந்து விட்டது.
80 BARBADOS BLVD., UNIT #4
SCARBOROUGH, ONT. ☎:(416) 410-6401


துர்க்கை அம்மன் ரூர்ஸ்
ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு
மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு
அழையுங்கள்
☎416-283-3969
☎416-287-2824
மொன்றியல் ☎514-344-2591





Kiruba Kirushan
Service with a Broad Smile

EASY HOME BUY
வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.
Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!
With a small down payment, you could own your dream home.
FOR ALL YOUR HOUSING NEEDS CALL
416-414-5562



# விளையாட்டுத் தகவல்கள் (90)




-எஸ் கணேஷ்

## மறந்தும் மறவாத நினைவுகள் 2001!!!

2002ஆம் புத்தாண்டில் எனது 90வது கட்டுரை ஆக்கத்தில் 'உலக தமிழோசை' (விளம்பரம்) பத்திரிகை மூலம் உங்களுக்கு 'புத்தாண்டு வாழ்த்துகள்' தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 11 வருடங்களாக 'விளம்பரம்' பத்திரிகையில் ஆரம்பித்து 'உலக தமிழோசை' யாக வெளிவரும் இப்பத்திரிகை தனது 12வது ஆண்டில் கால்பதிக்கிறது. இச் சமூக முன்னேற்றப் பத்திரிகையை உங்கள் கைகளில் தவளவிட்டுக் கொண்டிருக்கும் 'உலக தமிழோச்சை' பத்திரிகை வெளிவரத் துணைபுரியும் அனைவரும் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். செய்திப் பத்திரிகைள் வேறு. தகவல்ப் பத்திரிகைகள் வேறு. சமூக முன்னேற்றப் பத்திரிகைகள் வேறு. இந்த வகையில் நிருபிக்கப்பட்ட உண்மைத் தகவல்களை மட்டுமே அறிவு. ஆக்கம். ஊக்கம் தகவல்கள் மூலம் எமது தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு இலவசமாக வெளிவரும் பத்திரிகையாகும். இதில் கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து விளையாட்டுச் செய்திகளை எழுதி வரும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் வாசகர்களுக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் புதிய வருடத்தில் மறைந்து போன 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற பல முக்கிய விளையாட்டு சரித்திர நிகழ்வுகளை இங்கு பார்ப்போம். முதலாவதாக கிரிகெட் நிகழ்வுகளை எடுத்துக் கொண்டால். தமிழ் வீரர்களை உள்ளடக்கிய அணியான செஞ்சூரியன் அணியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சஞ்சய் துரைசிங்கம் கனடா நாட்டை 2003 World Cup க்கு பிரவேசிக்க வைத்தார். 17 வருடங்களின் பின்பு கனடா மீண்டும் ஒரு தமிழனால் World Cup விளையாட இருக்கின்றது. அது மட்டமல்லாமல் 3 தமிழ் வீரர்களை கனேடிய தேசிய அணிக்கு அளித்த செஞ்சூரியன் அணி 2001இல் முதன் முதலில் முதல்தர கிரிகெட் விளையாட்டில் கனடாவில் Cup Champion ஆனது எமக்கெல்லாம் பெருமை தரும் விடயமாகும்.



அடுத்து ஶ்ரீலங்கா அணியைப் பார்ப்போம். 2001 வருடத்தில் பல சாதனைகளை நிகழ்த்திய தமிழ் வீரன் முத்தையா முரளிதரன் முதலாவது இடத்தை எட்டிப் பிடித்த வருடமும் இதுவே. 2001 ஆண்டு 350 Test விக்கெட்டுகளை எட்டிப் பிடித்ததும் இவ் வருடமே. 2001ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய வீரரான Dennis Lillee இன் 300 விக்கெட் சாதனையை முறியடித்தார். பின்பு நியூசிலாந்து வீரரான Richard Hadlee's இன் 350 விக்கெட் சாதனையை குறைந்த ஆட்டங்களில் முறியடித்து இன்று தமிழ் வீரன். உலகத்தில் முதல் இடத்தில் பந்து வீசுவதில் உள்ளார் என்பது தமிழர்களுக்கெல்லாம் பெருமை தருவதாகும். இந்த ஆண்டு ஶ்ரீலங்கா அணிக்கும் ஒரு புத்துயிர் கொடுக்கும் ஆண்டாகும். ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் தங்கள் திறமைகளை காட்டி வந்த ஶ்ரீலங்கா அணி Test ஆட்டங்களில் இவ் வருடம் பல வெற்றிகளை குவித்துள்ளது. 2001ஆம் ஆண்டு முதலில் Ary Gold Cup ஐ (பாகிஸ்தான். நியூசிலரந்து) ஆகிய நாடுகளுடன் விளையாடி வெற்றிக் கிண்ணத்தை ஶ்ரீலங்கா கைப்பற்றியது. நியூசிலாந்து அணியை 4-1 என்ற ரீதியில் ODI போட்டிகயில் வெற்றி பெற்று இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் ஆட்டங்களில் 2-1 என்று தோல்வியுற்ற ஶ்ரீலங்கா அணி ODI ஆட்டங்களில் 3 - 0 என்று இங்கிலாந்து அணியை வெற்றி கொண்டது. Singer போட்டிகளில் இறுதிப் போட்டியில் சவுத்ஆபிரிக்காவை வென்று Singer Champion கிண்ணத்தை தனதாக்கியது. 2001ஆம் ஆண்டு இந்தியாவை Coca - Cola cup ஆட்டங்களில் படுதோல்வியடையச் செய்தது. நியூசிலாந்து. இந்திய அணியை வென்று Coca - Cola Cup யை தமதாக்கியது. அதுமட்டமல்லாமல் டெஸ்ட் ஆட்டங்களில் 2-1 என்ற ரீதியில் இந்தியாவை வெற்றி கொண்டது. ஆனால் இரண்டு வருடங்களாக சாஜா Cupஐ வென்று வந்த ஶ்ரீலங்கா அணி இவ்வருடம் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானிடம் பறி கொடுத்தது. அடுத்து மேற்குஇந்திய தீவுகள் அணியுடன் மோதி 3 டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி பெற்று மேற்கு இந்திய தீவுகளை White Wash செய்து உள்ளது. அதுமட்டுமல்லாமல் LG Abanss சுற்றுப் போட்டி Champion கிண்ணத்தையும்

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்)


Safety Truck

TRAINING SCHOOL LTD.

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

We Accept Welfare & Unemployment Insurance




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
(One On One Training)
அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

☎: (905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton,On.



Moka Market

Brampton, Mississauga மக்கள் மத்தியில்




உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், இறைச்சி, மீன் வகைகள், பத்திரிகைகள், தமிழ் வீடியோ, CD கசட்டுகள் போன்ற தேவைகளுக்கு உங்களுக்கு மிக அருகிலேயே சேவை செய்கிறது.
Moka market



விலையோ மலிவு   தரமோ உயர்வு

ஒருமுறை சென்று பாருங்கள் உண்மையை உணர்வீர்கள்.



MOKA MARKET
900 Rathburn Rd., #5 & 6
Mississauga
☎: 905 273-4137

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம்

### 1986ஆம் தொடக்கம் வெளிவந்த படங்களின் தொடர்ச்சி

**1986**

56. நட்பு
57. நான் அடிமை இல்லை
58. நானும் ஒரு தொழிலாளி
59. நாளெல்லாம் பௌர்ணமி
60. நிலவே மலரே
61. நீ தாணா 'அந்தக் குயில்
62. பதில் சொல்வாள் பத்திரகாளி
63. பன்னீர் நதிகள்
64. படிக்காத பாடம்
65. பாரு பாரு பட்டினம் பாரு
66. பாலைவன ரோஜாக்கள்
67. பிறந்தேன் வளர்ந்தேன்
68. புதிர்
69. புன்னகை மன்னன்
70. புதிய பூவிது
71. பூக்களை பறிக்காதீர்கள்
72. பொய் முகங்கள்
73. மச்சக்காரன்
74. மகா சக்தி மாரியம்மன்
75. மலரும் நினைவுகள்
76. மனக் கணக்கு
77. மனிதனின் மறுபக்கம்
78. மரகத வீணை
79. மறக்க மாட்டேன்
80. மருமகள்
81. மந்திரப் புன்னகை
82. மண்ணுக்குள் வைரம்
83. மாட்டுக்கார மன்னாரு
84. மாவீரன்
85. மாமியார்கள் ஜாக்கிரதை
86. மாருதி
87. மிஸ்டர் பாரத்
88. மீண்டும் பல்லவி
89. முதல் வசந்தம்
90. முரட்டுக் கரங்கள்
91. மெல்லத் திறந்தது கதவு
92. மேல் மருவத்தூர் அற்புதங்கள்
93. மைதிலி என்னை காதலி
94. மௌன ராகம்
95. மௌனம் கலைகிறது
96. யாரோ எழுதிய கவிதை
97. ரகசியம்
98. ரசிகன் ஒரு ரசிகை
99. ராஜா நீ வாழ்க
100. ரேவதி
101. ரோஜா மலரே
102. லட்சுமி வந்தாச்சு
103. வசந்த ராகம்
104. விடுதலை
105. விக்ரம்
[illegible] விடிஞ்சா கலியாணணம்
107. வேட்டைப் புலி
108. ஜிகு ஜிகு ரயில்
109. ஜீவ் நதி
110. ஜோதி மலர்


ரேகா



இயக்குனர் சக்தியின் உருவாக்கத்தில வந்த படம் 'மனக கணக்கு'. இதில் விஜயகாந்த கௌரவ வேடம் ஏற்றிருந்தாலும் நடிகர் கமலஹாசனுடன் பல காட்சிகளில் சேர்ந்து நடித்துள்ளார்.

A.V.M இன் மற்றுமொரு வெற்றிப்படம் 'தர்மதேவதை'. இதில் ராதிகா, சரத்குமார் ஆகியோர் நடித்துள்ளனர். 80 படங்களுக்கு மேல் வில்லனாக நடித்து வந்த நடிகர் சத்தியராஜ் இவ்வாண்டு முதல் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினார். இப் படத்தைத் தயாரித்து இயக்கியவர் பாரதிராஜா. படம் 'கடலோரக்கவிதைகள்'.

சாக்கமார்



இதன் மூலம் நடிகர் ரேகாவையும் நடிகர் ராஜாவையும் அறிமுகம் செய்கு வைத்தார். இப்படத்திற்கு

இதன் மூலம் நடிகர் ரேகாவையும் நடிகர் ராஜாவையும் அறிமுகம் செய்து வைத்தார். இப்படத்திற்கு இசையமைத்தவர் இளையராஜா. இது ஒரு வெற்றிப்படம்.

**விடுகதை**

1. நாளும் மெலிவார்க்கு நல்லதோர்வைத்தியரில்லை அவர் யார்? தினசரி கலண்டர்
2. தவமுனிவரில்லை ஆனாலும் குளக்கரையில் ஒற்கைக்காலில் தவம் இருப்பார் அவர் யார்? கொக்கு
3. அவன் அடித்தான் இவன் இசைத்தான் அது என்ன? மேளம்
4. நாலு கால் பாய்ச்சலில் நாலு வீட்டிலும் இரை தேடுவான் அவன் யார்? நாய்
5. பார்வைக்கு கல்லானவன் பல் பட்டால் தண்ணீரானவன் அவன் யார்? ஐஸ் கட்டி


**Neelam SILK**

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம்



சில்க்

☎: (416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)

**OODAM MAINTENANCE WORKS**

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

● ACCIDENT INJURIES

உங்களுக்கு தெரியுமா?

● CRIMINAL

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

● DOG BITES

● SLIP & FALL



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416
490-9199

அன்று இலங்கையில் கலகலப்பு
இன்று இன்ரநெற்றில் கலகலப்பு

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன்

416-490-9199

# தூறல்

## படைப்பாளி, பார்வையாளன், தொழில்நுட்பம்

அம்பாவில் தொடங்கி மனிதன் வரை கூர்ப்பின் பாதையில் பல படிகள். இடையில் குரங்கு, சிம்பன்னி முடிவில் மனிதன். இறுதிப் படியில் பகுத்தறிவு மனிதன் என்னும் விலங்கில் இணைந்து கொண்டது. நாடோடியால் நாடுகளற்று காடுகளில் திரிந்து கூட்டமாய் மாறி குடும்பம், சமூகம், பிரதேசம், நாடு என மாறியது. அத்துடன் பண்பு, மொழி, கலாச்சாரம் என்பனவும் இணைந்து கொண்டன. மொழி, மொழியில் படைப்புக்கள் என வளர்ந்தது. சிறு கதை, நாவல், கவிதை என படைப்புக்கள் வரையறுக்கப்பட்டன. விஞ்ஞான வளர்ச்சி, கல்லில் இருந்து கத்தி வரை செய்யவில்லை. சினிமா, தொலைக்காட்சி என வளர்ந்தது. அத்துடன் நின்றுவிடவில்லை படைப்புக்கள் பற்றிய விமர்சனம், கோட்பாடுகள் என படைப்புக்கள் மெருகூட்டப்பட்டன. இது விஞ்ஞான ரீதியாக வளர்த்தெடுக்கப்பட்ட படைப்புக்களுக்கும் விதிவிலக்கல்ல சினிமாவில் கோட்பாடு ரீதியான சர்ச்சைகள் 1930 களில் உச்சக் கட்டம் அடைந்தன.

2ஆம் உலகப் போருக்கு முன்பாக எழுந்த சர்ச்சைகள், கோட்பாடுகளுக்கு போரின் அரசியல் பின்னணியும் காரணமாயிருந்தது.

**யதார்த்தவாத சினிமா**

வாழ்க்கையின் உண்மை நிலை படம்பிடிக்கப்பட்டது. கலையரங்குகளுக்கு வெளியே, தொழில் முறை நடிக, நடிகையர் அற்று எடுக்கப்பட்டன. உதாரணம் 1930 களில் எடுக்கப்பட்ட ரஷ்ய படங்கள், லைன்ஸ் ரைனின் ரஷ்யப் புரட்சி பற்றிய படம்.

**Documentary மெய்விளக்கத் திரைப்படம்**

உண்மைச் சம்பவங்களை முன் நிறுத்தி எடுக்கப்படும் செய்திப் படம்.

**நவ யதார்த்தவாதம்**

சம்பவம் அல்லது சம்பவக் கோர்வைகள் படைப்பாளியின் பார்வையுடன் படைக்கப்படுகின்றன. "படைப்பாளி, தான் என்ன பார்க்கிறேன் என்பதைவிட தான் என்னத்தைப் பார்க்க விரும்புகிறேன் என்பதை வெளிப்படுத்த வேண்டும்" என்று George Lukacs கூறுகிறார். இதுவே நவ யதார்த்தவாதம் ஆகிறது. இந்தக் கோட்பாடு இரண்டாம் உலகப் போருக்கு சற்று முன்பாக உருவாக்கப்பட்டது. குறிப்பாக இத்தாலியில் தான் இதன் ஆரம்பமும் வளர்ச்சியுமிருந்தது.

**இத்தாலி - முசோலினி 1930 - 1945**

முசோலினி என்னும் சர்வாதிகாரி இத்தாலியை முதலில் நல்ல (?) முறையில் ஆட்சி செய்தான் என்ற கருத்துண்டு. நாடு பொருளாதார உறுதி நிலையை அடைந்தது. வீதிகள் போடப்பட்டன. கோயில்கள் மாநிலங்கள் புணரமைக்கப்பட்டன. வைத்தியசாலைகள் கட்டப்பட்டன. 1930 இல் ஒன்பது திரைப்படங்கள் வெளியிடப்பட்டன. 1942 இல் இது 119 ஆக உயர்ந்தது. தயாரிப்பாளர்களுக்கு 60% பணம் (மொத்த தயாரிப்புத் தொகையில் அரசவங்கியால் நிதி உதவியாக வழங்கப்பட்டது. இவை யாவும் முசோலினியின் பாசிச கொள்கைகளின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டன.

பின்னாளில் நவ யதார்த்தவாத சினிமாவின் முக்கிய இயக்குனர்களுள் ஒருவரான Roboto Rosselini உதவி இயக்குனராக இருந்த 'The White Ship' என்னும் திரைப்படம் (1941) முசோலினியின் பாசிச கொள்கைகளை நிலை நாட்டும் படம். இதில் மனிதமும் மனிதனின் உணர்வுகளும் மழுங்கடிக்கப்பட்டுள்ளன.


**நவ யாதர்த்தவாத சினிமா**

பாசிசத்துக்கு எதிராக தொடங்கப்பட்ட விமர்சனமாகவே இப் படைப்புக்கள் படைக்கப்பட்டன. போரின் போது இத்தாலியின் பொருளாதாரம் முற்றாக சேதமாக்கப்பட்டன. பாடசாலைகள், கோயில்கள், வீடுகள் அழிக்கப்பட்டன. பொருளாதாரம் மந்த நிலை அடைந்தது. இந்நிலையை திரைப்படங்கள் வெளிப்படுத்தின. எவ்வாறு போர் பற்றிய விமர்சனத்துடன் வாழ்வியல் பற்றிய பல கேள்விகளுடன், சுதந்திரம் என்ற கருத்தியல் பொருள் பற்றிய புதிய பார்வைகளுடன் வெளிப்படுத்தின.

படைப்பாளிகள் படைப்புக்களை பின்வருமாறு படைத்தார்கள்.

1. படைப்பாளியின் பார்வையில் மனிதர்கள்
2. அவர்களது பிரச்சினைகள்
3. இதற்கான விமர்சனங்கள் / கருத்துக்கள்.

சினிமா என்பது பார்வையாளனுக்கு விழிப்புணர்வை, புரிந்துணர்வை, வாழ்வின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்த வேண்டும். இது அவன் முன் கூட்டி அறிந்திருந்த கருத்துக்களில் இருந்து அவனை விடுவித்து சுதந்திரமாக அப்படைப்பை உள்வாங்கி புதிய கேள்விகளை எழுப்பி சீரான சமுதாயம் ஒன்றை உருவாக்க அவனை இட்டுச் செல்ல வேண்டும்.



**சுதந்திரம்**

சுதந்திரத்தைப் பற்றிப் பொதுவாகப் பேசும்பொழுது 'சுதந்திரம்', 'எந்தளவுக்கு சுதந்தரம்'. இது இன்னும் எல்லோரிடமும் எழும்பும் கேள்வி. சுதந்திரத்துக்கு எல்லை ஏது? எல்லைகளிலிருந்தால் அது சுதந்திரமா? இக்கேள்விகள் அன்றும் கேட்கப்பட்டன. நவ யதாத்தவாத சினிமாக் கோட்பாடுகளில் 'சுதந்திரம்' பற்றிய கருத்துக்கள் முக்கியமானவை. ஏனெனில் திரைக்கதை, தொழில்நுட்பம், கலைஞர்கள் போன்றவை இதன் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டன. மரபு சாராத திரைக் கதைகள் அமைக்கப்பட்டன. வசனங்களும் அவ்வாறே. Roberto Rosselini என்னும் இயக்குனர் திரைப்பட Studio களையே வெறுத்தார். இவை தமது காட்சிகளை கட்டுப்படுத்துகின்றன. இங்கு எடுக்கப்படும் காட்சிகளை studio அமைப்புக்கள் போன்ற பல காரணிகள் தீர்மானிக்கின்றன என்றார் "Bavecally You See the great enemy of the cinema & the studio' Roberto Rosselini. அதே போன்று இவர் Make up ஐயும் வெறுத்தார். இது நடிகர்களது உண்மைத் தோற்றத்தை மறைக்கிறது. அதே போன்று தொழில் ரீதியான நடிகர்கள் ஒரு பொழுதும் இயக்குனர். கதாபாத்திரத்தின் ஊடாக என்ன சொல்ல வருகிறார் என்பதை வெளிபடுத்தமாட்டார்கள். மாறாக தாம் என்ன கூற வருகிறோம் என்பதை வெளிப்படுத்துவார்கள் அல்லது கை தட்டல்களை பெறுவதற்கான பரிமாணமாக நடிப்பை மாற்றிக் கொள்வார்கள்.

'நீ என்ன பார்த்தாய் என்பதைவிட, என்னத்தைப் பார்த்தாய் என்பதே முக்கியம்' என்கிறார் பெலினி - மற்றொரு முக்கிய இயக்குனர். இவ்வாறான படைப்புக்களுக்கு இயக்குனர்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். அதற்கு தடையாக studio, தொழில்முறை நடிகர்கள் தடையாக உள்ளார்கள்.

மனித உறவுகள் (குடும்ப) சமூக உறவுகள் என வளர்ச்சியடைந்து பொதுநல உறவுகளாக பரந்துபடுகின்றன. இவ்வுறவுகளுக்கிடையிலான பிணைப்பு, வேறுபாடுகள், மேல்நிலை, கீழ்நிலை போன்றனவும் படைப்பாளிக் கூடாக பார்வையாளனை சென்றடைய வேண்டும். இது நவ யாதார்த்தவாதத்தின் மற்றொரு தோற்றப்பாடு.

(தொடரும்....)

-வானரன்


ACTION HONDA

புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service

இந்த மாதம் மட்டும்
2.8% Financing for All
New 2001
CRV (In Stock Only)



Call me Now!! 416-704-1179

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough



# அன்புத் தமிழ்



- கவிஞர் வி. கந்தவனம்

## மணம் செய்வதே மருந்து!

காதல் வாழ்க்கை எப்பொழுதுமே சீராகச் செல்வதில்லை. பிரச்சனைகள் இடையிடையே ஏற்படுவது இயல்பு. அவை வரவுந்தான் வேண்டும். அவைதாம் காதலைச் சோதிக்கும் உரைகல். அவையே காதலை வளர்த்துச் செல்லும் ஏணிப் படிகள். ஊடலுக்குப் பின் கூடல் என்பார்களே. அதுபோல் காதலை முழுமையாக அனுபவிக்க வழிகோலும் வகையில் துன்பங்கள் அமைவதுண்டு. காதலர்கள் சண்டை சச்சரவுகளை வளரவிடுவதில்லை. அவற்றைச் சமாளித்து இன்பம் துய்ப்பதே அன்பு உள்ளங்களின் இயல்பாகும்.
காதலர்களுக்கிடையில் வரக்கூடிய துன்பங்களில் பிரிவுத் துன்பம் தலையாயது. அதுபற்றிக் கடந்த கட்டுரையிலே ஓரளவு பார்த்தேம். பிரிவு பாலை நிலத்துக்குரிய ஒழுக்கமாயினும் பிற திணைகளிலும் வருவதற்குரிய சூழ்நிலைகள் அவ்வப்போது தோன்றுவதுண்டு.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் மக்கள் நுளையர், நுளைச்சியர் எனவும் அவர்களின் தலைவர்கள் சேர்ப்பன், துறைவன், கொண்கன் எனவும் அழைக்கப்பட்டனர். மீன் பிடித்தலும் உப்பு விளைத்துலும் இவர்களின் பிரதான தொழில்கள்.

மீன் பிடித்தற் பொருட்டுப் பிரிவு நேரினும் அவை நெடுங்காலம் நீடிப்பதில்லை. எனினும் தலைவன் மீன் பிடிக்கச் சென்ற பின் ஏற்படும் புயல், கடல் கொந்தளிப்பு போன்ற கடும் வானிலை மாற்றங்கள் தலைவிக்கு ஆற்றாமையை ஏற்படுத்தும். போர், வணிகம் போன்ற காரணங்களால் நிகழும் பிரிவு நீடிக்க வாய்ப்புகள் உண்டு. அந் நிலைமைகளும் தலைவிக்கும் தலைவனுக்கும் ஆற்றாமையைத் தோற்றுவிக்கும். அதனால் 'இரங்கல்' நெய்தலின் பொது ஒழுக்கமாயிற்று.

இனி, இந் நிலத்துத் தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் ஒருவனுக்கு இரங்கல் ஏற்படும் வகையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் கூறும் நல்லதொரு கலித்தொகைப் பாடலை நோக்குவோம்.



மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்
கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தலைபோலப் புள்ளல்குந் துறைவ கேள்:

ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின் என் தோழி
நல்நுதல் நலன் உண்டு துறத்தல் கொண்க
தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்
நின்றலை வருந்தியாள் துயரம்
ன்றனை களைமோ பூண்கநின் தேரே.

கலித்தொகை: நெய்தற்கலி 16

| | |
|---|---|
| முண்டகம் - கழிமுள்ளி | தில்லை - தில்லை மரம் |
| எக்கர் - மணல் திட்டி | கரகம் - கமண்டலம் |
| மரம் - சிவன் இருந்த ஆலமரம் | முடம் - கோணல் |
| புள்ளல் - குருகினம் | அலந்தவர் - வறியவர் |
| செறாமை - கெடுக்காமை | நோன்றல் - பொறுத்தல் |
| செறிவு - உறவு | மறை - மறைவான |
| கண்ணோட்டம் - கருணை | முறை - நீதி |
| வௌவல் - கொள்ளுதல் | நுதல் - நெற்றி |
| கொண்க - கொள்க | |
| சீர்மிகு சிறப்பினோன் - தட்சிணாமூர்த்தியாகிய சிவன் | |

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றமையால் வருந்தினாள். அது கண்டு பொறுக்காத தோழி, தலைவியின் துயரைத் தலைவனுக்கு மேற்கண்டவாறு எடுத்துச் சொன்னாள்.

'பெரு மலரையுடைய கழிமுள்ளியும் தில்லை மரமும் ஒருசேரச் சூழ்ந்த கடற் கரைக்கு அணியாகவுள்ளது பரந்த மணற்பரப்பு. அதன் ஒரு பக்கத்தே குவிந்த மணல் திட்டியிலே சீர்மிகுந்த சிறப்பினையுடைய தட்சிணாமூர்த்தியாகிய சிவன் இருந்த ஆலமரம் நிற்கின்றது. அவர் அதன் கீழ் இருப்பதற்கு முன்னதாக தூக்கி வைத்த நீர்நிறைந்த கமண்டலத்தைப் போன்ற பழங்களையுடையன அப்பால் உள்ள தாழை மரங்கள். அத் தாழைகள் பூத்தாற் போல நாரைகள் தாழைகள் மீது தங்கும். அத்தன்மைகளையுடைய நிலத்துத் துறைவனே, யான் கூறுவதைக் கேட்பாயாக!

'இல்வாழ்க்கை நடத்துதல் என்பது வறியார்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுதல். பேணுதல் என்பது கூடினாரைப் பிரியாது இருத்தல். மக்கட் பண்பு என்பது உலக இயல்பை அறிந்து ஒழுகுதல். அன்பு என்று சொல்லப்படுவது தன் சுற்றத்தைக் கெடாதிருத்தல். அறிவு என்பது அறியாதார் சொல்லும் சொல்லைப் பொறுத்தல். உறவு என்று கூறப்படுவது கூறியதொன்றை மறாதிருத்தல். நிறை எனப்படுவது மறைந்த ஒரு செய-லைப் பிறர் அறியாமல் ஒழுகுதல். நீதி எனப்படுவது நமர் என்று கண்ணோட்டஞ் செய்யாது செய்த கூற்றத்துக்கு ஏற்ற தண்டனை அளித்தல். பொறுமை எனப்படுவது பகைவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

'அவ்விதமே அவற்றையெல்லாம் அறிந்து அதன்படி ஒழுகிவந்தீராயின் அவ்வொழுக்கத்துக்குத் தகுந்தாற்போல ஒன்று கூறுவேன், அறிந்து கொள்க!

'என் தோழியின் அழகிய நெற்றியின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல் என்பது இனிய பாலை அருந்திவிட்டு அருந்திய பால் பாத்திரத்தை கவிழ்த்துவிடுதல் போன்றது. ஆகையினாலே, உன் பிரிவால் வருந்துகின்றவளை மணம் புரிந்து அவளின் துயரத்தைக் களைவாயாக. அதற்கு இப்பொழுதே உனது தேரில் குதிரைகளைப் பூட்டுவாயாக!'

இவ்விதம் தலைவியை மணம் புரிந்து கொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்துகின்றாள். இத்தகைய அகத்துறை 'வரைவுகடாதல்' எனப்படும்.


தோழியின் பேச்சிலே உள்ளுறை உவமையாகவுள்ள கருத்துக்கள் இலக்கிய நயத்தையுடையன. தலைவன் நெடுங்காலம் தலைவியைப் பிரிந்திருப்பதால் ஊர் அலர் தூற்றும். அவ்விதம் அலர் தூற்றுகின்றவர்களுக்கு உவமையாக முள்ளுடைய கழிமுள்ளியையும் கொடிய தில்லை மரத்தையும் கொள்ளலாம். அடுத்து, குருகினமும் தலைவனுக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. மீன்களுக்கு (அவைகளைக் கொன்று தின்பதால்) தீமை செய்ய வல்ல கொடிய நாரைகள் தீமையற்ற தாழம் பூக்களைப் போற் காட்சியளிக்கின்றன. அவை போல் தலைவிக்கு வருத்தம் உண்டாக்குகின்ற தலைவன் பிறருக்கு நல் மகனைப் போல் தென்படுகின்றான்.

மேலும் இப்பாடல் நல்வாழ்க்கைக்கு வேண்டிய அரிய கருத்துக்கள் பலவற்றைக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம். வாழ்க்கை வாழ்வதற்கே, எனின் தனி மனிதன் நடத்தை பிறருக்குத் துன்பம் விளைத்தல் ஆகாது, எல்லோரும் இன்புற்றிருக்கும் வகையில் மக்கள் கட்டுப் பாட்டுடனும் கடமை உணர்வுடனும் நடந்து கொள்ளல் வேண்டும் என்பன போன்ற அறநெறிகளைப் புகட்டும் இப் பாடல், நம் முன்னோர் வாழ்கை பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளைத் தொகுத்துக் கூறுவதாக உள்ளது.

* * * * *


YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.



CUSTOM MADE....
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE

# விண்வெளி

- தருபவர் - கனி

## அந்நியர்கள்:- 74



### அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்!

நத்தார் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடியிருப்பீர்கள் என எண்ணுகின்றேன்! புதுவருட கொண்டாட்டங்கள் அமோகமாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும் என எண்ணுகின்றேன். மனத்தின் ஊனங்களுக்கு கொண்டாட்டங்களும் பண்டிகைகளும் நல்ல ஔடதங்கள் அல்லவா! இவ் வகையான தினங்கள் இருப்பதனால் தான் மனித இனம் தன்னை அழித்துக் கொள்ளாமல் இன்னமும் உலகில் உள்ளது. எனவே எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் கொண்டாட்டங்களையும் பண்டிகைகளையும் மனம் திறந்து வரவேற்போம்! கொண்டாடுவோம்! மேலாக மிக மிக நன்றாக அனுபவிப்போம்!

நிற்க.

இது வரையிலான. அந்நியர்களை - ஏலியன்களை தேடும் எமது பாதையை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். ஏலியன்களை இனம் காணும் வகையில் முதலில் 'பூமியின் சொந்தக்காரர்கள் யார்?' எனப் பார்த்தோம். மதங்கள் கூறும் வகையில் மனித இனம் இறைவனால் எமது பூமியில் படைக்கப்பட்டதா அல்லது பூமியில்லாத வேறு எங்கேயோ படைக்கப்பட்டுப் பின்னர் ஆண்டவனின் கட்டளைப் படி. நிர்ப்பந்தத்தின் படி பூமிக்கு தள்ளப்பட்டதா என்று எல்லாம் பார்த்தோம். இவ் வகையில் மதங்களுக்கு மதம் சிறு சிறு வேறுபாடுகள் இருப்பினும் ஆண்டனால் மனித இனத்திற்கு இப் பூமி கொடுக்கப்பட்டு உள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியே உள்ளது.

மறுதலையாக மனித இனம் ஆண்டவனின் சிறப்பான படைப்பு இல்லை! வெறுமனே இயற்கையின் பல்லாண்டுகள் நடைபெற்ற வேதியல் மாற்றங்களினால் உருவான உயிரினங்களின், பல்லாயிர மாண்டுகளின் பரிணாமா வளர்ச்சியின் இன்றைய விளைவே ஆகும்! என்பது சில விஞ்ஞானக் கருத்தாகும். இதன் படி இன்னமும் பல்லாயிரம் ஆணடுகளின் பின்னர் இந்த மனித இனம் இல்லாது போய்விடும்; அல்லது வேறு ஒரு வடிவிற்கு மாற்றலாகி விடும். இக் கைங்காரியத்தைச் செய்யப் போவதும் கூட பரிணாமா மாற்றமேயாகும். வேதியல் மாற்றங்களினால் உயிரினம் நமது பூமியிலேயே தான் தோன்றியதா அல்லது பூமியல்லாத வேறு எங்கேயோ தோன்றி பூமியிற்கு ஏதோ ஒரு வகையில் கொண்டுவரப்பட்டதா என்பதும் விஞ்ஞானப் புதிர்களில் ஒன்று. வால்வெள்ளி. எரிகற்கள். விண்கற்கள் என்பனவற்றில் ஏதோ ஒன்றின் மூலம் தான் உயிரினங்கள் அல்லது உயிரினம் ஒன்று தோன்றுவதற்கான 'அமினோ அமிலங்கள்' எனும் அடிப்படை புரதச் சேர்க்கையானது பூமிக்கு வந்திருக்கலாம் என்பது சில ஆய்வாளர்களது அபிப்பிராயம்.- இவ் வகையாக உயிரினங்கள் பூமியில் தோன்றினாலும் கூட மனித இனம் இப் பூமியில் தோன்றவில்லை! வானில் - விண்வெளியில் எங்கோயோ தோன்றி ஏதோ ஒரு காரணத்திற்காக பூமிக்கு வந்து தங்கியவர்களில் இருந்து வந்தது தான் இம் மனித இனம் என்றார்கள் - என்கிறார்கள் சிலர். எது எப்படி இருப்பினும் இன்றைய நிலைப்பாட்டின் படி பன்நெடுங்காலமாக பூமியை சுதந்தரித்துக் கொண்டிருக்கும் நாமே இந்த மண்ணின் சொந்தக்காரர்கள் என்பதில் வேற்றுக் கருத்துக்கு இடமில்லை. எம்முடன் எமது பூமியில் உள்ள ஏனைய உயிரினங்கள் எல்லாம் எமது சொந்தங்கள். எமது உடமைகள்! இவை தவிர்ந்த ஏனையவைகள் - ஏனைய உயிரினங்கள் ஏலியன்கள் - அந்நியர்கள்! இதுவே ஏலியன்கள் பற்றிய எமது நிலைப்பாடு.


ஏலியன்கள். UFO கள் பற்றிய எண்ணம் அக்காலத்தில் இருந்தே மனிதர்களிடையே இருந்திருக்கிறது என்பது பல ஆய்வாளர்களது உறுதியான எண்ணம். ஒரு வேளை மனித குலத்திடையே ஆன கடவுள் என்ற எண்ணம் கூட இந்த ஏலியன்களின் செல்வாக்கின் விளைவாகத்தான் இருக்குமோ என்ற எண்ணம் ஆய்வாளர்களிடையே இன்னமும் உண்டு. அவர்களின் கருத்துப்படி இயற.கையின் வடிவங்களைத் தவிர்ந்த ஏனைய பழைய கடவுள்கள் எல்லாம் ஏலியன்களாகத் தான் இருக்க வேண்டும்! அவற்றில் இருந்து வளர்ச்சியடைந்த அல்லது திரிபுற்ற சமயங்களே இன்றைய சில சமயங்கள். மதங்கள் என்பது அவர்களது கருத்து. அதற்கு நிரூபணமாக சில சமயக் கொள்கைகளை, பூமியின் எல்லா இடங்களிலும் காணப்படும் பல அடையாளங்களைக் கூறுகின்றார்கள். புராணங்களில் வரும் இராச்சதர்கள் கூட ஏலியன்களாகத் தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். எகிப்தின் பாரிய பிரமிட்டுகளும் கூட இந்த இராட்சதர்களினால் அல்லது விண் இரகசியம் தெரிந்த ஏலியனால்தான் நிர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள். தமிழ்நாடடின் நீலகிரி குகை ஓவியங்களை ஏலியன் வருகையிற்கான சிறந்த நிரூபணமாகக் கூறுகின்றார்கள். ஏலியன்களின் செல்வாக்கு பூமியில் இருந்தது என்பதற்கான பல சான்றுகள் இன்னமும் உள்ளது; அவற்றில் சில பெரு நாட்டின் பாரிய விமான ஓடு தளங்கள், சிலந்தி வரைபடம், இஸ்ரேலின் வெள்ளைக் குதிரை, கம்பூச்சியாவின் 'அங்வார் கோயில்' களின் அமைப்பு என்பன. விவிலியத்தில் உள்ள ஏசேக்சியரின் புத்தகத்தின் சில பகுதிகளைக் கூட Alien Sighting இற்கான ஒரு பதிவாக இவ்வாய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

மனிதர்களுடனான ஏலியன் தொடர்புகள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் பல ஆயிரம் Alien Contacts கள் உலகின் பல பாகங்களிலும் பதிவாகிய வண்ணம் உள்ளன. பாமரர்கள் முதல் படித்தவர்கள் வரை சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை வேறுபாடின்றி இந்த ஏலியன் தொடர்புகள் நடைபெற்றன; நடைபெறுகின்றன. இவற்றில் இருந்து மனித இனம் சில விண்வெளி புதிர்களுக்கான விடைகளைக் கூட நிரூபணம் இன்றி கண்டு கொண்டுள்ளது. ஆயினும் ஏலியன் உண்மையா? பொய்யா? ஏலியன்கள் இருக்கின்றார்களா? இல்லையா என்ற கேள்விகள் பெரிய அளவில் உள்ளன.

சென்ற வருடத்தில் இவ்விடயங்கள் பற்றி 'விண்வெளி' இல் சுவாரசியமாகப் பார்த்தோம். இந்த ஏலியன் விடயம் இன்னம் முடியவில்லை (முடிவடையப் போவதும் இல்லை!) தொடர்ந்தும் சில காலங்களுக்கு இந்த ஏலியன்கள் பற்றிப் பார்ப்போம். இன்று எமது மனித இனம் 'விண்வெளி' ஆராய்ச்சியில் பல அரிய சாதனைகளைச் செய்துள்ளது. செய்துகொண்டு இருக்கின்றது. இவற்றுக் கெல்லாம் காரணம் கூட ஏலியன்கள் தான் என்பது ஒரு சாராரின் கருத்து! வாதம் கூட! இவைகளைப் பற்றி எல்லாம் வரும் நாட்களில் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்!

முடிவாக.

வாசியுங்கள்! நன்றாக வாசியுங்கள்!
சிந்தியுங்கள்! நிறைவாக சிந்தியுங்கள்!
நீங்கள் அறிந்து ொகண்டதை. தெரிந்து கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!




மீண்டும் உங்கள் அனைவருக்கும் 'கனி' இன் கனிந்த நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களுடன். இனிதே வரப்போகும் தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக!

* * * * *


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**சிவா நடராஜா**

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



**Accident & Traffic Ticket**

**(14 Years Insurance Claims Experience)**

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave., E.
Suite 223, Scar., Ont.



**J DAYCARE**



1 Hr. - $3.00
Day - $15.00
Week -$60.00

☎ 416-502-3033

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

தினசரி நடவடிக்கைகள்:-

* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount) தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்

# 2002ஆம் ஆண்டு ஜனவரி முதல்

# YOGAS


நடாத்தும்

# அதிரடி மலிவு விற்பனை

கனடாவில் உள்ள விலைப் பட்டியலை ஒத்ததான அல்லது அதனை
விடச் சிறந்ததான மலிவு விலையில்

☎: (416) 267-0408
Kennedy & Eglinton
733 Kennedy Road (Ken-Mark Plaza)






## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### நானாக நான் இல்லை

நீ உன்னையே திருத்திக் கொண்டால் உலகம் தானே திருந்தும் என்பது போல, ஒவ்வொருவரும் தன்னைத் தானே திருத்திக் கொள்வதற்குப் புதிய வருடங்கள் பிறக்கும் காலங்களில் மனங்களில் உறுதி எடுத்துக் கொள்வது வழமை. ஆனால் எமது உறுதிகளில் எத்தனை பேர் உறுதியாக இருக்கின்றோம்? வாழ்க்கையை நாம் எப்படியும் வாழ்ந்து விட்டுப் போகலாம். ஆனால் இறுதியில் அப்படி வாழ்ந்து இருக்கவே கூடாது என்று எமது மனங்களில் தோன்றும் அளவிற்கு வாழாமல் பார்த்துக் கொள்ள நாம் தான் முயற்சிக்க வேண்டும். ஏனெனில் எமது மனங்களுக்குத் தெரியும் நாம் செய்வது சரியா அல்லது பிழையா என்று. ஆனால் சுயநலத்தினாலும் வரட்டுக் கௌரவத்தினாலும் நான் என்ற அகந்தையினாலுமே பலரும் சரியான வழியைத் தவறவிட்டு விடுகிறார்கள்.

மனிதர்களை. மனிதர்களாக மதிக்கத் தெரிய வேண்டும் என்பதற்கு ஒரு கதை உண்டு. ஓர் ஊரில் இருந்த முதலியார் ஒருவர். அந்த ஊர் மக்கள் தன் மேல் வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் தவறாக எடை போட்டராம். அந்த ஊரில் நடக்கும் இறப்பு வீடுகளுக்குத் தான் நேரில் சென்று துக்கம் விசாரிக்காமல் தனது கைத் தடியை வேலை ஆட்களிடம் அனுப்பி வைப்பாராம். சில காலங்களின் பின்பு அந்த முதலியார் இறந்த போது அவரது ஊரில் இருந்த ஒவ்வொருவரும் ஒரு கைத் தடியைத் தங்கள் சார்பாக முதலியார் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்களாம். ஏதோ ஒரு வகையில் சாதாரண மக்களிடம் அன்பையும் மதிப்பையும். பெற்றுக் கொண்ட சிலர் அந்த கதையில் வந்த முதலியார் பாணியில் வாழ்வதை இன்னும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. ஊருக்கு உபதேசம் செய்வதை விட்டு. நாம் செய்யும் உபதேசங்களை நாமே வாழ்க்கையில் கடை பிடித்துக் கொண்டால் நல்லதொரு உலகம் உருவாகும். மற்றவர்கள் செய்யும் பிழைகளை மன்னித்து ஆனால் அவற்றை மறந்து விடாமல் மீண்டும் மீண்டும் மற்றவர்களால் பாதிக்கப்படாமலும் வாழுதல் அவசியமாகும்.

எம்மில் இருக்கும் தவறான போக்கைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று மனதில் நாம் உணர்கின்றோமோ அன்றே நாம் திருந்தும் வழியில் அரை வழி வந்து விட்டோர் ஆகின்றோம். மிகுதி வழி எமது மனத்திடத்திலேயே தங்கி இருக்கின்றது. மற்றவர்களில் இருக்கும் தவறான போக்கை அன்புடன் சுட்டிக் காட்டுவதில் தவறில்லை. ஆனால் முயலுக்கு மூன்று கால் என்று அடம்பிடிப்பவர்களை விட்டு விலகி செல்வதே புத்திசாலித்தனமானது ஆகும்.

மனிதனாக பிறக்கும் அனைவருமே ஏதோ ஒரு குறையைக் கொண்டு இருக்கிறோம். புதிய ஆண்டில் நான் நானாக வேண்டும் என்று விரும்பும் அனைவரின் வாழ்க்கையும் இன்பமாக அமைய இறைவனை வேண்டிக் கொண்டு புதிய வருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

சிந்தனை தொடரும்....
பரம். **G.**
ஒரு சாதாரண மனிதன்


# கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்-

## நகைச்சுவைத் தொடர்....



58

தெளிவு.

ஏதோ கலக்கத்தில் சிவன் (சூரன்) அசுரனுக்கு பலத்தைக் கொடுத்தார் ஆனால்
தெளிவு வந்ததும் அவனை அழிக்க முருகனைப் படைத்தார்.



தன் இஸ்டப்படி மதம் மாறி பல இன்னல் கண்டு
சைவசமயத்தில் மீண்டும் மாறி தெளிவு கண்டார் திருநாவுக்கரசர்

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என மங்கையர் வசப்பட்டு திசை மாறிய அருணகிரிநாதர்
தெளிவு வந்த பின் அருளியது இன்னும் நாம் பாடும் திருப்புகழ்



ஒன்றாய் உண்டோம் உறங்கினோம் வாழ்ந்தோம் என்பதை மறந்து 25 வெள்ளிக்காக யேசு பிரானை கட்டி முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான் யூதாஸ் தெளிவு வந்ததும் பிழையை உணர்ந்து பட்ட மரத்தில் தூக்குப் போட்டு உயிர் நீத்தான்.

ஆனால் இன்று பல பட்ட மரங்கள் இருந்தும்
பல பிழைகளை உணர்ந்த எவரும் பட்ட மரத்தை நாடுவதில்லை.

**கலக்கமும் அதன்பின் வரும் தெளிவும்**
**உலகத்தில் பலருக்குப் பாடம் புகட்டியுள்ளது.**

2 வாரம் வேலையில்லாமல் இருந்த ரூபியும் அது போலத்தான் உலகர், ரூபன், பிராங்பேட் பேரம்பலம், மனைவி மற்றும் செக்கண்புளோர் செல்லம்மா, ஆட்டிலறி அன்னம்மா....
எல்லோரும் TV, Radio, பேப்பர் அது இது எனப் பொழுது போக்க....
ராசம்மா மட்டும் பம்பரமாக சமையல் தேநீர், வீடு துப்பரவு எல்லா வேலையும் செய்ய TV இல் மாமியாரா மருமகளா பட்டிமன்றம். ஒரு பக்கம் ரூபிக்கு சரி போலவும் ஒருபக்கம் பிழை போலவும்.... யோசித்துக் கொண்டிருக்கும் போது.....
ஏதோ.... படித்தோம் ஏதோ Office இல் வேலை செய்கிறோம்
என்ற திமிர்.... Office என்றா கூட எத்தனை ஃபைல்களை (File) தூக்கி அங்கும் இங்கும் அலைகிறோம். மேசை, அலுமாரி போன்றவற்றை துப்பரவு செய்கிறோம்.
குப்பைகளைக் கூட கொட்டுகிறோம்.



இது வரையில் வீட்டில் ஒரு வேலையும் செய்யவில்லையே....
ராசம்மா.... I mean என் மாமி எத்தனை.... வேலைகளைச் சளைக்காமல் செய்கிறா....இதற்கிடையில் உலகர்
I mean என் மாமன் அரை மணிக்கொரு தேநீர் ஒரு மணிக்கொரு சுருட்டு இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு சாப்பாடு....
நான் இந்த வீட்டில் என்ன செய்கிறேன்
ரூபிக்குப் படங்களில் வரும் Flash Back எண்ணச் சுழற்சி....
T.V பார்ப்பதை நிறுத்தி விட்டு எழுந்து மாமி நான் ஏதன் ஹெல்ப் பண்ணட்டோ என்று நடந்த ரூபி ஓ.... ஐ ஆம் ரயேட்....
ரூபன் கான் யு ஹெல்ப் என்றபடி மெல்ல நடக்க
கவனம் ரூபி என்ற படி ஆட்டிலறி அன்னம்மா ரூபியைப் பிடித்து இருத்த.....
இஞ்சை.... தள்ளுங்கோ என்ற படி செக்கண் புளோர் செல்லம்மா.... வாசித்துக் கொண்டிருந்த பேப்பரால் விசுக்க....




அல்ரா சவுண்ட் இல்லாத காலத்திலேயே பெண்களின் அங்க அசைவைப் பார்த்து ஆணா.... பெண்ணா... என சொல்லும் ஆட்டிலறி அன்னம்மா ரூபியின் கையைப் பிடித்துவிட்டு. ரூபன் இனி ரூபியை கவனமாக.... பார்....
உலகண்ணை.... ரூபிக்கு குழந்தை....



ரூபன் அப்பாவாகப் போகிறார் என்றதும்
ரூபி பிறந்த காலத்தில் காட்டாத வெக்கத்தைக் காட்டி.... உதட்டைக் கடித்துச் சிரிக்க
ராசம்மாக்கா சுவரில் உள்ள முருகன் படத்தைப் பார்த்து கதிரமலையானே....
நான் கும்பிட்ட தெய்வம் கைவிடேல்லை.... என்று கதைத்துக் கொண்டிருக்கும் போது.....

செக்கண்ட் புளோர் செல்லம்மா.... மாறி மாறி.... ரெலிபோன் செய்து கொண்டிருந்தா ஹண்டகாரில் குண்டு விழுந்து பரவுவதை விட வேகமாக செய்தி பரப்பிக் கொண்டிருந்தா செல்லம்மா....
இதே வேளை ரெலிபோன் அடித்தது செல்லம்மாவுக்கு
ஓ. யா. ரூபன். ஹியர்.... வண் மினிற்.... பிளீஸ் எனவும்
ரூபன் ரெலிபோனைப் பறிக்க....
ஓ... Yes.. OK.... Thank You.... என்ற படி
சந்தோசத்துடன் ரெலிபோனை வைக்க....
என்னடா.... என ஆட்டிலறி கேட்க.. புது வேலை Interview உக்கு போன கிழமை நேரை இண்டைக்கு வேலைக்கு வரட்டாம் என்று சொல்ல பார்த்தியே ரூபிக்கு குழந்தை... ஒரு பக்கம் பலன் ரூபனுக்கு வேலை... புயல்.... பூகம்பம் அமைதி எல்லாம் வாழ்வில் சகஜம் சந்தோசம் துக்கம் எல்லாம் நாமே உருவாக்கிக் கொள்வது தான்.



கார் வாங்கினோம்.... வீடு வாங்கினோம் பங்குச் சந்தையில் பணம் போடுகிறோம் ஒருவருக்கும் தெரியாமல் கொடுக்கல் செய்கிறோம் (அதில் சில வேளைதான்.... வாங்கல் இருக்கும்) கலக்கம் .... தெளிவு வாழ்வில் பல இடங்களில் அனுபவப்பட வைக்கிறது.
திருமணமான பின்பு அட... வீணாக இவளைக் கட்டினோமே... என ஏங்குவோரும்



வீடு வாங்கி குடிபுகுந்த பின் பலரின் கதைகளைக் கேட்டு பலரிடம் கருத்துக் கேட்டு மனம் குழம்புகிறது இந்த வீடு விலை கூடப் போல இருக்கு வாசல் கதவு சரியில்லை சம்மருக்கு ஒழுகேல்லை... இப்ப ஒழுகுது... ஏஜெண்ட் ஏமாத்திப் போட்டார் அவர் இங்கிலீசிலை விளங்கிப்படுத்தினவர் எனக்கு இங்கிலீஸ் விளங்கும் ஆனா நான் இங்கிலீசிலை கேட்ட கேள்வி அந்த ஏஜெண்டுக்கு விளங்கேல்லை பாக்கிங் Free றோட்டிலை விடலாம் எண்டார்.... இங்க விடியப் பறத்தலை Ticket வைக்கிறாங்கள்
கார் வாங்கினது அதே பிரச்சினை. ஒயில் சேஞ்ச் பண்ணாமல் ஓடி மோட்டார் எரிந்ததால் ஏஜெண்ட், சேல்ஸ்மன் என்ன செய்ய முடியும்....
நாங்கள் விளக்கமில்லாமல் அவசரத்தில் முடிவெடுத்து மற்றவர்களை குறை கூறமுடியாது....





நாங்கள் வாங்கின வீட்டிற்கு நாலாவது வீட்டிலை நாய் வளக்கினம் அது விடியற்காலை குலைக்குது பக்கத்து வீட்டிலை பூனை வளக்கினம் வேலைக்கு போகேக்குள்ளை குறுக்கை போகுது.
ஏஜெண்ட் வீடு வாங்கித் தரும் போது ஒண்டும் சொல்லவில்லை. அப்படி என்றால் ஏஜெண்ட் அந்த ஏரியாவில் குடியிருந்து பார்த்துத் தான் வீடு விற்பனை செய்ய வேண்டும்.

இந்த அமளி துமளியில் செக்கண்புளோர் செல்லம்மா சோபாவில் அரைத் தூக்கத்தில் இருந்தா செல்லம்மா... செல்லம்மா என ஆட்டிலறி அதட்ட, திடுக்கிட்ட செல்லம்மா சோம்பல் முறித்த படி திருவெம்பாவை விடிய எழும்பினா கோவிலுக்கு போனியே.... இந்தக் குளிருக்குள்ளை என ராசம்மா.... கேட்க....ச்சீ.... றேடியோவிலை நேரடி ஒலிபரப்பு அதுதான் வேளைக்கு எழும்பின....
மார்கழி மாதம் பனிநிறைந்த நன்னாளில்
நீராடப் போதுவீர் போதுவீரோ....
உலகர் மனதுள் சிரித்தார்



மூன்று குறி இழுத்து.... தீட்சை கேட்ட சமயம். ஆசாரம் எல்லாம் எங்கே தீட்சை கேட்டு குறிவைப்பதைவிட தினமும் ஏதோ குறியில் இருக்கிறார்கள்.
பாரதி தினம். வள்ளுவர் தினம். புதுவருடம். தீபாவளி.
நத்தார். யார் நினைக்கிறார்கள். வேலையில் லீவு.... இல்லை... பிசி.... கடந்த வருடம் சோர்ந்துண்ட நண்பர்கள் இந்த வருடம்?... உலகரின் மனம் எங்கோ....
சென்றது வானொலியில் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் நத்தார் வாழ்த்துக்கள் ஒலித்துக் கொண்டிருந்தது முத்திரைச் செலவில்லை. ரெலிபோன் செலவில்லை இருந்த இடத்தில் இருந்து வாழ்த்துத் தெரிவிப்பது பெரிய கஸ்டமா?...
உலகர் மனதுள் நினைத்து சிரித்தார்.

* * * * *


ஞானம்ஸ் ஸ்ருடியோ



**Introducing 1 Hour Photo Lab:**
**3x5 & 8 x 12**
***Professional Photographer*** - கதிர்
**☎: 416 - 750 - 8118**
**2381 Eglinton Ave., E.**
**KENNEDY / EGLINTON, SCARBOROUGH**

# இன்சூரன்ஸ் (Insurance)



"இன்சூரன்ஸ்" என எல்லோராலும் என்றும் பேசப்படுவது தமிழில் "காப்புறுதி" என்னும் சொல்லினுள் அடங்கும். 'காப்புறுதி' என்றால் 'இழப்பீடு' அதாவது 'பாதிப்பு நிவாரணம்' எனப் பொருள்படும். அனேகமாக ஒரு மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு வகையான இழப்புகளுக்கும் காப்புறுதி செய்து கொள்ளலாம். அவையாவன பின்வருமாறு:

* வாகனக் காப்புறுதி (Auto Insurance)
* ஆயுள் காப்புறுதி (Life Insurance)
* கடுமையான நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)
* உடல் இயலாமைக்கான காப்புறுதி (Disability Insurance)
* முதலீட்டுக் கடன் அடமானக் காப்புறுதி (Mortgage, Loan Insurance)
* வீட்டு காப்புறுதி (Home Insurance)
* பொருட்கள் சொத்துகளுக்கான காப்புறுதி (Property Insurance)
* பற்சிகிச்சை காப்புறுதி (Dental Insurance)
* மருத்துவ செலவு காப்புறுதி (Medical Insurance)
* வியாபார காப்புறுதி (Business Insurance)
* வியாபார பங்குதாரர்களுக்கிடையேயான காப்புறுதி (Buy & Sell Agreement Insurrance)
* தொழில் வர்த்தக மேலதிக செலவுகளுக்கான காப்புறுதி (Business Overhead Expenses Insurance)
* Professional Negligence Insurance (தொழில் தவறு நட்டஈட்டு காப்புறுதி)

**வாகன காப்புறுதி (Auto Insurance)**

'வாகன காப்புறுதி' என்ற தலைப்பில் இக் கட்டுரைத் தொடரைத் தொடங்க முன்பு 'Toronto Star' பத்திரிகையிலும் 'Toronto Sun' பத்திரிகையிலும் தொடர்ச்சியாக வரும் ஒரு சிறு விளம்பரம் மாதிரியான ஒரு 'அறிவித்தல்' [illegible] சிறு தகவலை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

"நுகர்வோர் வழிகாட்டல்" என்னும் பாணியில் வாகனங்களுக்குக் காப்புறுதி செய்ய விரும்பும் ஒருவர் நேரடியாக ஒரு குறிப்பிட்ட கம்பனியில் காப்புறுதி எடுக்கும் போது, அதிகமான விலை அதாவது மாதாந்த கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். அதாவது வாகனங்கிளுக்கு காப்புறுதி வழங்கும் கம்பனிகள் ஒரு குறிப்பிட்ட வாகனத்திற்கும் அதனை உபயோகிக்கும் உரிமையாளர் தொடர்பான பல அம்சங்களை அடிப்படையாக வைத்தே மாதாந்தக் கட்டுப் பணத்தினை தீர்மானிப்பார்கள்.

**இம் 'மாதாந்தக் கட்டுப் பணம்' அதாவது 'காப்புறுதி விலை' என்பது வித்தியாசம் வித்தியாசமான வாகனங்கள் அதனை உபயோகிக்கும் உரிமையாளர்கள் யாவருக்கும் பல்வேறு வகையான ஏற்ற இறக்க விலைகளில் கம்பனிகள் விலைகளைத் தீர்மானிக்கின்றன என்ற அம்சத்தினை குறிப்பிட்டு விலை குறைந்த கம்பனியினைத் தெரிவு செய்து, அந்தக் குறிப்பிட்ட கம்பனியிலேயே வாகனக் காப்புறுதியினைச் செய்து கொள்ளுங்கள் என்ற ஒரு முக்கியமான தகவலை இவ் அறிவித்தல் குறிப்பிடுகின்றது.**

எந்தக் காப்புறுதிக் கம்பனியாக இருந்தாலும் காப்புறுதி விலையினை தீர்மானிக்கும் போது. கம்பனிகள் பின்வரும் மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே விலைகளைத் தீர்மானிப்பார்கள்.

1. கம்பனி முதலீடுகளில் உள்ள முதலீட்டு வருமானங்கள். (Investment Income)
2. கம்பனிக்கு ஏற்படும் பல்வேறு வகையான செலவுகள் (Operating Expenses)
3. பெற்றுக் கொள்ளப்பட்ட நட்டஈட்டு விபரங்கள் (Claim Historry)

குறிப்பிட்ட கம்பனியின் முதலீட்டு வருமானம் அதிகரிக்கும் போது. செலவுகள் குறையும் போது. பெற்றுக் கொள்ளப்படும் நட்டஈடுகள் வீழ்ச்சியடையும் போது. மாதாந்த வாகனக் காப்புறுதி கட்டுப் பணத்தினையும் குறைவாக நிர்ணயிக்கப்படும். இதற்கு எதிர் மறையாக முதலீட்டு வருமானம் குறையும் போது. செலவுகள் அதிகரிக்கும் போது. அதே நேரம் அதிகமாக விபத்துகளை எதிர் கொண்டு ஏராளமானோர் குறிப்பிட்ட கம்பனியில் நட்டஈடுகளையும் அதிகமாக பெற்றிக் கொள்ளும் போது மாதாந்த வாகனக் காப்புறுதிக் கட்டுப் பணமும் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகவே போய்விடும்.

இதே வழியில் தான் வாகன காப்புறுதிகளின் விலை என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

'காப்புறுதி' என்ற சொல்லின் அடிப்படைக் கருத்து? அதன் செயல்பாடு எப்படி அமைகின்றது?

'ஆபத்து' அல்லது 'இழப்பு' என்பதனை பல்வேறு வழிகளிலும் வாழ்வில் என்றும் நடக்கலாம் என எதிர்பார்க்கும் ஒவ்வொருவரும் சிறு பணத் தொகையினை மாதம் மாதம் செலுத்த இதே வழியில் இலட்சக்கணக்கான மக்களின் மொத்த மாதாந்த பணத்தினை கம்பனிப் பாதுகாப்பில் வைத்திருந்து, அதனை வெவ்வேறு முதலீட்டுத் திட்டங்களில் முதலிட்டு வளர்த்து எடுத்து இவ் இலட்சக் கணக்கான மக்களின் பணத்தில் இருந்து பாதிப்பினை எதிர் கொண்ட சொற்பமான மக்களுக்கு வழங்கி ஒரு சிறு நிவாரணத்தினை வழங்கும் ஒரு திட்டமாகும். அதாவது ஒரு கூட்டு முயற்சி.

**கூட்டுப் பணம் இக் கூட்டில் உள்ள பாதிக்கப்பட்ட தனி நபர்களுக்கு நட்ட ஈடாக வழங்கப்படுகின்றது என்பதே அடிப்படைத் தத்துவமாகும்.**

மாதாந்த வாகன காப்புறுதி கட்டுப்பணம் என்பது வெவ்வேறு கம்பனிகளினால் வேறு பட்ட நிலைமையில் தீர்மானக்கப்படுவதால். சரியான கம்பனியினை தீர்மானித்துக் கொள்வதற்கு

(416) 686-0531 (416) 686-0529

என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தங்களுக்கு உகந்த கம்பனி எது என்பதனை முதலில் தீர்மானத்துக் கொள்ளுங்கள் என்பதனையே இவ் ஆங்கிலப் பத்திரிகைகளின் அறிவித்தல் வழிகாட்டுகின்றது. இத் தொலைபேசி இலக்கத்தினை அழைக்கும் போது பின்வரும் 'கம்பியூட்டர் குரல்' மூலம் கேட்கும் கேள்விகளுக்கு தொலைபேசி மூலம் தாங்கள் பதில்களை வழங்கிக் கொண்டே வரவேண்டும்.

1. What city do you live in?

தாங்கள் இருக்கும் நகரின் முதல் மூன்று எழுத்தினையும் அழுத்த வேண்டும். உதாரணமாக 'Toronto' தொலைபேசியில் உள்ள மாதிரி

8 என்ற இலக்கம் T என்ற சொல்லுக்கும்

6 என்ற இலக்கம் O என்ற சொல்லுக்கும்

7 என்ற இலக்கம் R என்ற சொல்லுக்கும் அழுத்தும் போது. ரொரன்ரோ என்பது தாங்கள் வசிக்கும் நகரம் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

2. What are the first 3 digits of your postal code?
3. What is the make of your vehicle?
4. What is the year of your vehicle? 5. What is the model?
6. What is your annual mileage? 7. Liability coverage?
8. Collision Coverage? எவ்வளவு வேண்டும் என்பது Comprehension coverage?
9. Gender? 10. Married Or single?
11. Years licensed? 12. Number of accidents?
13. Number of tickets? 14. Number of cancellations?

இத்தகைய மேற்குறிப்பிட்ட வாகனக் காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படும் போது கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் வழங்கி முடித்தவுடன் அதே கம்பியூட்டர் குரல் தாங்கள் உள்ள நிலைமையில் மலிவாக காப்புறுதி வழங்கக் கூடிய மூன்று கம்பனிகளின் பெயர்களை சிபார்சு செய்யும்.

அடுத்த கட்டமாக இக் கம்பனிகளினுடன் தொடர்பு கொண்டு விலை விபரங்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளும் போது. மலிவான விலையில் காப்புறுதி செய்ய முடிகிறது. சில கம்பனிகள் நேரடியாகவே வாகனக் காப்புறுதியினை விற்பனை செய்கின்றன. சில முகவர்கள் மூலமோ அல்லது முகவர்கள் கம்பனிகள் மூலமோ விநியோகம் செய்கின்றது.

ஆங்கில பத்திரிகையில் வரும் இத் தகவலின் படி வருடம் ஒன்றுக்கு சுமார் $1000 டொலர் வரை மீதப்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேவையில்லாமல் அதிக விலையில் பணத்தினை இழக்க வேண்டாம் என்று அறிவுறுத்தவே இங்கு வலியுறுத்தப்படுகின்றது. (தொடரும்)

மேலதிக விபரங்களுக்கு: சிவ பஞ்சலிங்கம் (B.Com)
(Insurance Broker Licensed)

யோகா சோதிடம்



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்
☎: (416) 299-8361



# மாணவர் பகுதி

*-S.F. Xavier (ஆசிரியர்)*



**Answers to Tutorial 91**

December 15, 01

**Ans. 1.** Where $x = -1$, $k + k - 6 = 0$, $k = 3$

$\therefore 3x^2 - 3x - 6 = 0$, when $x = -m$

$3m^2 + 3m - 6 = 0$, ie. $m^2 + m - 2 = 0$

$(m + 2)(m - 1) = 0$, $m = 1$ or $-2$

(b) $4^{x+2} - 4^{x+1} + 4^x = k.4^x$ $\quad 4^2.4^x - 4.4^x + 4^x = k.4^x$

$4^x(16 - 4 + 1) = k.4^x$ $\quad \therefore k = 13$

**Ans. 2.** Since only three of the 5 wheels are increase at any time, the total distance travelled by all the wheels is 3(100) = 300km. But each of the 5 wheels is used for same distance.
$\therefore$ Each wheel is used for $300 \div 5 = 600$km

**Ans. 3 i.** Let x = Distance between two Towns in km. Driving at 100km/h,
If takes $= {}^x/_{100}$ hrs
Driving at 110km/h $= {}^x/_{100}$hrs, Differences $= {}^9/_{60}$ hrs
$\therefore {}^x/_{110} + {}^9/_{10} = {}^x/100$ $\quad x = 165$km

**Ans.4.** (1) + (2) gives $a + 2b = d$, subs. in (3) it gives
$c + 2b = 0$, $b = {}^{-c}/_2$, subs $b = {}^{-c}/_2$ in (1) $a = {}^{3c}/_2$
$\therefore$ max value of c is -2 and a = -3

**Ans.5.** 2875

## Tutorial - 92

1. Sum of three consecutive integer is 78. [illegible]t are those number.


2. A chemist mixed 60% alcohol solution to make a 50% alcoholic solution. How many litres of each were used to make 100 litres of 50% solution.

3. A spherical snow ball is melting so that the volume is decreasing at a rate of $1cm^3$ / sec. At what rate is the radius decreasing when the radius is 5cm.

4. Factorize $2x^{2n} - 7x^n + 3$

5. A ladder 4m long rest against a vertical wall. If the bottom of the ladder slides away from the wall at a speed of 30cm / sec.
How quickly is the top of the ladder sliding down the wall when the the bottom of the ladder is 2m from the wall.

By. Mr. S.F. Xavier (Teacher) Tel: (416) 431-6774

# பூட்டு? சாவி?

**KEERTH LOGSMITH**

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தாமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

**416-439-3709 Pager: 375-7330**


### இயேசுவின் அருளுரை

* பாவத்தை உணர்ந்தும், தூய உள்ளம் கொண்டும் வாழ்பவர் மேலுலக இன்பம் அடைவர்.
* தமது தீய செயலை உணர்ந்து, அதற்காக வருந்துபவர் விரைவில் ஆறுதல் பெறுவர்.
* அமைதியாக வாழ்பவர் மகிழ்வில் திளைத்து இன்ப நிலை எய்துவர்.
* பிறரிடம் இரக்கம் காட்டுபவர்க்கு இரக்கம் என்னும் பண்பு இயல்பாக அமையும்.
* குற்றமற்ற உள்ளம் படைத்தோர் இறைவனைக் காண்வர்.




# TUITION

* Chemistry > Gr. 11 - Gr. 13
* Algebra& Calculus > Gr. 13
* Physics & Finite > Gr. 13
* Maths New Curriculum for Grade 12 Geometry & Discrete Mathemetices, Universict preparation இவற்றுடன் OAC பாடங்கள்.

கனேடிய கல்வி அனுபவம் பெற்றவரால் நடாத்தப்படுகிறது.

**NEILSON / MCLEVIN**

**PL. CALL: Mr. & Mrs. Sharma (416) 724-8336**



# TUTION

கனடாவில் முதுமானி (**M.Sc.**) பட்டம் பெற்ற ஆசிரியர்களால் கணிதம (**Math**), இரசாயனம் (**Chemistry**) 6ஆம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழக வரை கற்பிக்கப்படும். தொடர்புகளிற்கு **S. Kumar**

**Cell: (416) 835-5806 Home: (416) 282-1421**

* மாணவர்களின் நலன் கருதி இரண்டு இடங்களில் கற்பிக்கப்படும்.
* பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்

**Morningside & Ellesmere, Kennedy & Ellesmere**

**EMMAS LEARNING CENTRE**

**MCCOWAN & SHEPPARD PL. CALL: (416) 609-1428**

# ENGLISH & MATH TUITION

**[Under Taken For All Grades From Gr.2 To OAC]**
**By**
**(Experienced Lecturers With Wide Experience)**
**IN**
**English (Grammatical / Spoken / Written)**
**AND**
**Math (From Grade 2 To OAC Including Finite, Calculus, Algebra & Geometry)**
***Individual Classes* Are Also Available For Grades**
**9 TO OAC IN MATH & ENGLISH**
**STARTING FROM JANUARY 07, 2002**
**PL. CALL: (416) 431-6774 / 416 292 2803**
**20 TUXEDO COURT, #1212, SCARBOROUGH**


# கனடிய பாடசாலை -கல்வித்திட்டம்

*-S. Sharma*

கனேடிய பாடசாலைகளும் கல்வித் திட்ட முறைகளும் என்கின்ற தொடரில், குறிப்பாக ஒன்ராரியோ மாகாணத்தின் கீழ் பெற்றார் மாணவர்கள் நன்மை கருதி இங்குள்ள கல்வி முறை சம்பந்தப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் தகவல்களையும் ஆராய்ந்து எழுதப்படவுள்ளது.

இத் தொடரில் முக்கியமாக பெற்றோர்கள் எந்தெந்த விடயங்களைத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களது பிள்ளைகள் எவ்வாறு தங்களது பாடசாலை விடயங்களில் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள் என்று அறியும் பெரும் வாய்ப்பை உருவாக்குவது. பெற்றோர்களே தங்களது பிள்ளைகட்கு பாடநெறிகளை வழிகாட்டுவது, ஆலோசனைகள் வழங்கும் வாய்ப்பும் தெளிவுற அமைவது போன்ற மிகப் பெரிய நோக்குடனேயே இக் கட்டுரைப் பகுதி இப்புதிய ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

புதிய கல்வித் திட்ட முறையானது முற்றிலும் கடினமானதாக அமைந்திருக்கின்றது. எனினும் இத் திட்டம் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்களான இலங்கை. இந்தியர்கட்கு பெரும் சவால் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கையின் கல்வித் திட்ட முறையுடன் இதனை ஒப்பிடும் போது இது பல படிகள் வேறுபாடுகள் உடையனவாகவே காணப்படுகிறது. இலங்கை இந்தியர்கள் தங்களது குழந்தைகளின் கல்வி விடயத்தைக் கண்காணிக்கு முறை முற்றிலும் மாறுபாடானது. அதிக அக்கறையுள்ளதாகவும் இருக்கிற காரணத்தால் எம்மினத்தவர்களது கல்வி வளர்ச்சி கனடாவில் இப்புதிய திட்டத்தின் மூலம் உயர் இடத்தை எட்டிவிடும் என்பது திண்ணம்.

தமது பிள்ளைகள் கல்வித் துறையில் முன் வரவேண்டும் என்கிற மிகப் பெரிய குறிக்கோளை மனதிற்கொண்ட அனைத்து பெற்றோர்களும் தங்களது பிள்ளைகட்காக எதையும் தியாகம் செய்யத் துணிகிறார்கள். இவ்வாறான எண்ணமும் அக்கறையும் வேறு இனத்தவர்களிடம் அவ்வளவு ஆழமாக இருக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் அவர்களது வாழ்க்கை முறை சுயசம்பாத்தியம் சுயகவனிப்பு என வேறுபட்டதே! அதீத முயற்ச்சி செய்யும் எமது பெற்றோர்களின் இயல்பால் எம்மின மாணவர்கள் கனேடிய மக்கள் மத்தியில் சிறந்த கல்விமான்காளாவார்கள் என்பது உறுதியாகிவிடும்.

பெற்றோர்கள் இவ்வளவு தூரம் நம்பிக்கையும் அக்கறையும் வைக்கும் இதே வேளை மாணவர்களான பிள்ளைகள் எவ்வளவு தூரம் இதனை

(தொடர்ச்சி 03 ஆம் பக்கம்)

# சுவாசமும் மனித ஆயுளும்

**- நயினையம்பதி நா. க. சிவராமலிங்கம்**

சுவாசத்திற்கும் மனித ஆயுளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மூச்சுப் போனால் பேச்சுப் போச்சு என்பார்கள். சுவாத்தை அளவோடு செலவழிப்பவர்கள் நீண்ட நாட்கள் உயிர் வாழ்வர் என்பது உறுதி. ஒருவனுக்குப் பொதுவாக பன்னிரண்டு அங்குல சுவாசம் உள்ளே சென்று நாலு அங்குலம் மட்டும் வெளியில் கழிந்து எட்டு அங்குலம் உள்ளேயே தங்கிவிடுமானால் அவன் 120 வயது வரை வாழ்வான் என்று ஆன்றோர் கூறியுள்ளனர். இக் காரணம் பற்றியே நமது முன்னோர்கள் பிராணாயாமம் செய்து சுவாசம் அழியாமல் காத்து வந்தனர் என்று அறிகிறோம்.

ஈராறு கால்கொண்டு எழுந்த புரவியைப்
பேராமல் கட்டிப் பெரி துண்ண வல்லீரேல்
நீராயிரமும் நிலம் ஆயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான் நந்தி ஆணையே என்பது திருமந்திரம்

மனிதன் சராசரியாக ஒரு நிமிடத்தில் 15 முறை சுவாசத்தை உள்ளிழுத்து வெளியில் விடுகின்றான். இந்தக் கணக்கின் படி பார்த்தால் ஒரு நாளில் (15 x 60 x 24) மொத்தம் 21600 முறை சுவாசிக்கின்றார்கள். ஒரு முறை மூச்சை உள்ளிழுக்கும் போது வலது நாசித் துவாரமானால் 12 அங்குலமும் இடது நாசித் துவாராமானல் 16 அங்குலமும் இரு நாசித் துவாரங்களுமானால் 64 அங்குலமும் உள்ளே செல்கின்றது என்து திருமந்திரம் கூறுகின்றது.

பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினோ டாறும் உயர்கலை பான்மதி
ஒத்த நல் அங்கியது எட்டெட்டு உயர் கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்து கொள்வீரே

சுவாசம் வெளியேறும் போது ஒவ்வொரு செயலுக்குத் தகுந்தாற் போல கீழ்கண்டவாறு வெளியேறுகின்றதென்று 'நிஜானந்தபோத' கூறுகின்றது.

ஈராறே பார் சமாதி தன்னில்
இயங்கி நடக்கில் ஈரெட்டாம்
மாறா தோடில் ஐயைந்தாம்
மருவித் துயில் அவ்வாறாம்
காரார் குழலாருடன் கூடிக்
கலவி கழித்திட்டால் எட்டெட்டாம்
நேராய் நோக்கி நிலைநிறுத்த
நிற்கும் சிவமும் அது.

அமர்ந்திருக்கும் போது 12 அங்குலம் நடக்கும் போது 16 அங்குலம்
ஓடும் போது 25 அங்குலம் உறங்கும் போது 36 அங்குலம
உடல் உறவின் போது 64 அங்குலம்

மேலேயுள்ள கணக்கின்படி மனித உடலுக்குள் பிறப்பிலேயே சேமிப்பில் வைக்கப்பட்டுள்ள பிராணவாயு அதிகப்படியாக வெளியேறி அழிகின்றது என்று அறிகின்றோம்.

ஞான மார்க்கத்தில் தவம் செய்பவர்களுக்கு வெளியேறும் சுவாசத்தின் அளவு படிப்படியாகக் குறைந்து இறுதியில் உள்ளேயே நிலைத்து நிற்கும் - இதை சமாதிநிலை - தூங்காமல் தூங்கும் நிலை - சாகாமல் சாகும் நிலை என்று கூறுவர். சுவாசம் வெளியில் செல்வது குறையக் குறைய பின்வரும் சக்திகள் உண்டாகின்றன என்று 'நிஜானந்த போதம்' கூறுகின்றது. வெளியேறும் சுவாசம் குறைந்த பட்ச அளவான 12 அங்குலத்திலிருந்து

11 அங்குலமாகக் குறைந்தால் உலக இச்சை போகும்
10 அங்குலமாகக் குறைந்தால் ஞானமுண்டாகும்
9 அங்குலமாகக் குறைந்தால் விவேகியாவான்
8 அங்குலமாகக் குறைந்தால் தூரதிருஷ்டி தெரியும்
அங்குலமாகக் குறைந்தால் ஆகாய நிலை தெரியும்
அங்குலமாகக் குறைந்தால் காய சித்தி உண்டாகும்
4 அங்குலமாகக் குறைந்தால் அட்டமாசித்தி உண்டாகும்
3 அங்குலமாகக் குறைந்தால் நவகண்ட சஞ்சாரம்
2 அங்குலமாகக் குறைந்தால் கூடுவிட்டு கூடு பாய்தல்
1 அங்குலமாகக் குறைந்தால் ஆன்ம தரிசனம்

உதிந்த இடத்திலேயே நிலைத்தால் - சமாதி நிலை - பேரின்பப் பெருநிலை சுவாசத்திற்கு ஒலி உண்டு. உட்புகும் சுவாச ஒலி 'ஸம்' எனப்படும். வெளிவரும் சுவாச ஒலி 'ஹம்' எனப்படும். தவத்தால் சுழுமுனை செல்லும். சுவாச ஒலி 'ஸ்ஓஹம்' எனப்படும்.

மனித உடலுள் மூச்சுக் காற்று மூன்று வழிகளில் அதாவது இடகலை - பிங்கலை. சுழுமுனை ஆகியவற்றின் வழியாக உள்ளே செல்கின்றது. அவ்வாறு செல்லும் மூச்சுக் காற்று சகஸ்தாரத்தில் உயிராக - கடவுளாக ஒளிர்கின்ற சிவலிங்க சொருபமான சோதியைச் சென்று பணிகின்றது. இந்த நியதிப்படி ஒவ்வொரு வழியாகவும் வந்து தன்னைப் பணிகின்ற சுவாசத்திற்கு தனித்தனி ஆற்றல்களை இறைவன் அமைத்துள்ளான். எனவே மனிதனின் வெற்றி தோல்விகளுக்கு சுவாச ஓட்டம் காரணமாக அமைந்துள்ளதை கண்டுணர்ந்த பெரியோர்கள் ஒவ்வொரு வழியாக சுவாசம் நடக்கும் போதும் எந்தெந்தச் செயல்களைச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

சந்திர கலை நடக்கும் போது செய்யத் தகுந்தவை

1. தூது போதல்
2. புத்தாடை புதிய நகைகள் அணிதல்
3. திருமணம் செய்தல்
4. பணியாள் தேர்வு செய்தல்
5. கிணறு வெட்டல்
6. வீடு கட்டல் - குடிபுகுதல் - விற்றல்
7. பெரியோரைக் காணல்
8. சாந்தி கழித்தல்
9. தெய்வப் பிரதிட்டை செய்தல் - அருச்சனை செய்தல்
10. மத்தியஸ்தம் செய்தல்
11. கல்வி பயிலல்
12. தனம் - தான்யம் சேர்த்து வைத்தல்
13. பாப விமோசனம் செய்தல்

சூரிய கலை நடக்கும் போது செய்யத் தகுந்தவை

1. உபதேசம் செய்தல்
2. போரிடுதல்
3. பயிர் விளைத்தல்
4. தீராத வழக்கை தீர்த்து வைப்பதற்கு வாதிடுதல்
5. சவாரி போதல்
6. காவியம் எழுதுதல்
7. சங்கீதம் பாடுதல்
8. பிசாசு ஓட்டுதல்
9. மந்திரம் உருவேற்றல்
10. மருந்துண்ணல் உறங்கல்
11. நீந்துதல்
12. விஷங்களை இறக்குதல்
13. யோகம் செய்தல்

சுழுமுனை நடக்கும் போது செய்யத் தக்கது தவம் ஒன்றேயாகும்.

மூச்சை அடக்கினால் ஞான நிலை எய்தலாம் - மூலாதாரத்தில் அமைந்து கிடக்கும் குண்டலினி சக்தியை இடை - பிங்கலை சுழுமுனை நாடிகளின் வழியே முறையே ஆறாதாரங்களையும் கடந்து செலுத்தினால் பிறவாப் பெருநிலை அடையலாம். உடம்பினைப் பெற்ற பயன் ஈசனைத் தேடுதலாகும். ஈசன் எழுந்தருளும் அழகிய ஆலயமாக உடம்பினை ஆக்குதலே வாழ்வின் பயன். சித்தர்களும் - முக்தர்களும் - ஞானிகளும் இதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியுள்ளனர்.


** ** **


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 126**



சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JANUARY 28, 2002க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**இடமிருந்து - வலம்**
1. ஓலையில் எழுத உதவுது
3. அறிவுள்ளவன்
4. பட்டம் (வல - இட)
5. பூமி
6. தொண்டு
8. வளையல் (வல - இட)
9. ஒழுங்கு (வல - இட)
10. ஆடை (வல - இட)
11. அழகு (வல - இட)

**மேலிருந்து - கீழ்**
1. எக்காலமும்
2. மூலப்பொருள்
4. கண்
6. சிறிய நீர்நிலை (கீழ் - மேல்)
7. மறைத்து வைத்த பொருள்
10. கோபம் (கீழ் - மேல்)
11. வருங்காலம் (கீழ் - மேல்)



**125இல் வெற்றி பெற்றோர்**
1) C. Bavalam, Donmills, Ont.
2) E. Jeyam, Mississauga, Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*


**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**


Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு
LONG GRAIN WHITE RICE
RIZ A GRAIN LONG
8KG
BASMATI RICE
Pure Gingelly Oil
ROASTED CURRY (CHILLI) POWDER
SPICY CAFE
Hot Curry Powder
LAIT CONDENSE
MANGUE CONFIT
MANGO PICKLE
Niru
Niru
உலகத்தேசத்தில் ஈழத்தேசத்தின் வாசனை "நிருபிராண்ட்"
Makers & Distributors of Niru Brand Products
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: (416) 750-1976 Fax: (416) 750 -8779
Email: niru@total.net Web: www.niru.com
Niru (Europe) Ltd., P.O.Box 6, Becknham, Kent BR3 6ZT UK Tel: 181-6408228
நிரு பிராண்ட் தயாரிப்பாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

# நாமும் நமது இல்லமும் (137)

Raja M. Mahendran P. Eng.
Sale Rep.





வீடு வாங்குபவர் - வீட்டுப் பிரதிநிதியின் தொடர்புகள் வீடு வாங்கியதுடன் முடிவதல்ல. வீடு வாங்கியவர்களிற்குரிய வீட்டுப் பிரதிநிதியின் தேவையானது, வீடு வாங்கிய பிற்பாடே உருவாகின்றது. வீடு வாங்க விரும்புபவர்களிற்கு வீடு விற்பது பெரிய வேலையல்ல. அவரின் தேவைக்கேற்ப அவரின் எதிர் காலத்தை தொலைநோக்குடன் சிந்தித்து வீடு விற்பதே சிறப்பானது. தங்களுக்குரிய தகுதியான தரமான வீட்டுப் பிரதிநிதியை (Family Realtor) ஐ தேர்ந்தெடுப்பது வீடு வாங்குபவரின் பாரிய கடமையாகும். ஆரம்பம் சிறப்பாக அமைந்தால், பின்னால் நடைபெறப் போகும் சகலதும் வெற்றியாக அமையும் என்பது. புதிய வருடத்தில் மனதிற்கேற்ற மனை அமைந்து குறையாத செல்வம் பெற்று துன்பமின்றி வாழ இறைவன் அருள் புரிவராக

-ராஜா எம். மகேந்திரன்


## VIMAC HOME RENOVATIONS

SPECIALIZING IN INSTALLATION OF

* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS

& GENERAL HOME RENOVATION

FREE ESTIMATE

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES



## YARLCAN

## STEAM CLEANING

CARPET CLEANING

DUCT CLEANING









உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்

மோகன் ☎: (905) 887-7436 Cel: 416 721-9709



## RHYTHMS BANQUET SERVICE

திருமணம், பிறந்ததின விழா, பூப்புனித நீராட்டு விழா மற்றும் சகல நிகழ்வுகளிற்கான மண்டபத்தினுடன் கூடிய சகல சேவைகளும் ஒரே இடத்தில் நியாயமான செலவில் பூரண திருப்பியுடன் செய்துகொள்ள அழையுங்கள்

பாலா : 416 525 - 6000 மோகன் 416 303-4600



2001 இன்று
இன்ரநெற்றில்
கலகலப்பு

1972 அன்று இணுவிலில்
கலகலப்பு

விஷு வருடத்தில்
குஷியான செய்தி

கலகலவென்று சிரித்து மகிழ கலகலப்பு தீசனின்

இன்னும் பார்க்கவில்லையா? **kalakalappu.net**

## BASEMENT FOR RENT

KENNEDY & DENISON
2 BEDROOMS BSMT FOR RENT. INCLU. UTILITIES. CABLE, PARKING. CLOSE TO EVERY THING. AVAIL JANUARY 01, 2002
தொடர்புகளுக்கு: 905 947-0478

MORNINGSIDE & MCLEVIN
1 BEDROOM BSMT FOR RENT. SIDE ENTRANCE. BRAND NEW BSMT. PARKING AVAIL. CLOSE TO TTC, HWY, SCHOOL, STORES ETC. AVAIL ANYTIME.
416-725-0557 / 416-315-9397

MIDDLEFIELD & STEELES
1 BEDROOM BSMT APT. FOR RENT WITH FACILITIES. PARKING. AVAIL. JANUARY 01, 2002. CLOSE TO TTC & ETC.
தொடர்புகளுக்கு: 905 201-7687

MCCOWAN & STEELES
2 BEDROOM BSMT APT. FOR RENT. SEP. ENTRANCE. CABLE. CLOSE TO EVERY THING. AVAIL. JANUARY 01, 2002
தொடர்புகளுக்கு: 905 294-9094

MARKHAM & SHEPPARD
1 BEDROOM BSMT FOR RENT. SIDE ENTRANCE. CLOSE TO EVERY THING. AVAILABLE JANUARY 01, 2002
தொடர்புகளுக்கு: 416 717-9548

NEILSON & MCLEVIN
1 LARGE BEDROOM BSMT FOR RENT. SEP. ENTRANCE. LAUNDRY, CABLE, UTILITIES INCLUDED. TTC AT DOOR. COUPLE WELLCOME ONLY. AVAIL. IMMEDIATELY.
PL.CALL: (416) 724-0378

SCAR. GOLF CLUB RD. & ELLESMERE
2 அல்லது ஓர் அறையாக BSMT வாடகைக்கு உண்டு. SEP. ENTRANCE. EAT IN KITCHEN. PARKING. WASHER, DRYER. CLOSE TO SCHOOL, STORES, TTC, ETC. AVAILABLE IMMEDIATELY
தொடர்புகளுக்கு: 416 289-2370

MARKHAM & STEELS
2 BEDROOM BSMT FOR RENT. PARKING, CABLE, CLOSE TO TTC, SCHOOL, STORE, MALL, AVAIL. IMMEDIATELY
தொடர்புகளுக்கு: 905 472-1961

KENNEDY & LAWRENCE
2 BEDROOM BSMT FOR RENT. SEP. ENTRANCE. CLOSE TO EVERYTHING. தொடர்புகளுக்கு: (416) 704-6951 / (416) 288-9306

DANFORTH & EGLINTON
1 & 2 BEDROOM S BSMT FOR RENT. SEP. ENTRANCE. PARKING, CABLE. AVAIL. JANUARY 01, 2002. CLOSE TO TTC, SCHOOL, STORES.
SIVA -: 416 838-9444

MORNINGSIDE & MORNING VIEW TRAIL 2 BEDROOM BSMT FOR RENT. SEP. ENTRANCE. PARKING, CABLE. CLOSE TO TTC, STORES, SCHOOL. AVAIL. JANUARY 01, 02.
தொடர்புகளுக்கு: 416 284- 6001

## BASEMENT FOR RENT

MCCOWAN & HIGHGLEN
2 BEDROOM BRAND NEW BSMT APT. FOR RENT. SEP. ENTRANCE. AVAIL. JANUARY 15, 2002. CLOSE TO HIGH SCHOOL, TTC, PARKING, ETC.
தொடர்புகளுக்கு: 905 470-0337

BRIMLEY & STEELES
2 BEDROOMS BSMT FOR RENT. SEP. ENTRANCE. PARKING, CABLE. CLOSE TO TTC, SCHOOL, SHOPPING. NON SMOKER PREFERRED. AVIL. FEBRUARY 01, 2002
தொடர்புகளுக்கு: 905 613-9154

NELISON & 401
2 BEDROOMS WALK OUT BSMT FOR RENT. SEP. ENTRANCE. WASHER, DRYER. CLOSE TO UNIVERSITY OF TORONTO. COUPLE, STUDENTS (2) PREFERRED. AFTER 6PM WEEK DAYS WEEKDAYS ANYTIME.
தொடர்புகளுக்கு: 416 724-4945

NEILSON & FINCH 2 BEDROOMS BSMT FOR RENT. SEP. ENTRANCE. LARGE KITCHEN, LARGE LIVING ROOM, CLOSE TO SCHOOL, MALL, TTC. AVAIL. JANUARY 01, 2002,
தொடர்புகளுக்கு: 416 298-6717

MARKHAM & STEELES
2 BEDROOM WALKOUT BSMT FOR RENT. SEP. ENTRANCE. PARKING, CABLE. CLOSE TO TTC, MARKHAM TRANSIT & ETC. RENT NEGOTIABLE. AVAIL. IMMEDIATELY.
RES. 905 294-0851
CELL: 416 456-5098

VICTORIAPARK & LAWRENCE
1 BEDROOM BSMT APT. FOR RENT. SEP. ENTRANCE. PARKING, CABLE. AVAIL. FEBRUARY 01, 2002. CLOSE TO TTC, SCHOOL, STORES & ETC.
தொடர்புகளுக்கு:416 285-5582

LAWRENCE & MCCOWAN
2 BEDROOM BSMT FOR RENT. SEP.ENTRANCE. PARKING, CLOSE TO SCHOOL, TTC, HOSPITAL, AVAIL. JANUARY 01, 2002. COUPLE PREFERRED
PL.CALL: 416 473-7828

MARKHAM & LAWRENCE
1 LARGE BEDROOM BSMT FOR RENT WITH FURNITURE. SEP. ENTRANCE., KITCHEN, WASHROOM, LIVING ROOM INCLUDED. LADIES PREFERRED. CLOSE TO TTC, SHOPPING MALL, SCHOOL & ETC.
தொடர்புகளுக்கு: 416 431-7830

MIDLAND & FINCH
சகலவசதிகளுடன் கூடிய ஓர் அறை கொண்ட BSMT வாடகைக்கு உடனடியாக உண்டு. YOUNG COUPLE PREFERRED.
தொடர்புகளுக்கு: 416 292-2142
416 567-8696

MCCOWAN & STEELES
2 BEDROOM NEWLY DONE BSMT FOR RENT. SEP. ENTRANCE. 2 MIN. TO TTC.
தொடர்புகளுக்கு: (905) 201-7831

## BASEMENT FOR RENT

KENNEDY & LAWRENCE (SOUTH OF WEST)
984 KENNEDY ROAD.
2 BEDROOMS, SEP. ENTRANCE. AVAILABLE JANUARY 01, 2002.
தொடர்புகளுக்கு: 416-716-4749

MARKHAM & MILNER
1 LARGE BEDROOM FOR RENT WITH ATTACHED WASHROOM. FAMILY / OLD COUPLE PREFERRED. CLOSE TO TTC & ETC. AVAIL. IMMEDIATELY.
தொடர்புகளுக்கு: 416 293-0066
சுதா - 416 577-5676

KENNEDY & EGLINTON
2 BEDROOM BSMT APT. FOR RENT. SIDE ENTRANCE. CABLE, PARKING. AVAIL. FEBRUARY 01, 2002. CLOSE TO TTC, SCHOOL, SUBWAY, STORES & ETC.
தொடர்புகளுக்கு: 416 265-3099
416-473-7482

MCCOWAN & DENISON
1 BEDROOM BRAND NEW BSMT FOR RENT. PARKING, CABLE. CLOSE TO TTC, SCHOOL, PARK & ETC. AVAIL. JANUARY 01, 2002
தொடர்புகளுக்கு: 905 471-1361

MCCOWAN & DANFORTH
2 BEDROOM BSMT FOR RENT. CLOSE TO EVERYTHING.
தொடர்புகளுக்கு: 416 264-0764

## FOR RENT

LAWRENCE & SCAR. GOLF CLUB ROAD
SPLIT LEVEL HOUSE WITH BEDROOM ON GROUND FLOOR AVAILABLE IMMEDIATELY.
1 BEDROOM, KITCHEN, LAUNDRY 1½ BATHROOM, SHOWER STALL & LARGE LIVING ROOM PARTLY FURNISHED WITH SEPARATE ENTRANCE. PREFERABLEY CHRISTIANS
PL. CALL: DANIEL
☎: (416) 438-8181

## HOUSE FOR RENT

FINCH & HWY 27
4 BEDROOM HOUSE FOR RENT. NEW HOUSE. 3 WASHROOMS. AVAIL. IMMEDIATELY. CLOSE TO WOODBINE MALL, TTC, SCHOOL, HUMBER COLLEGE. CREDIT CHECK (கடன் பெற்று, திருப்பிக் கொடுக்கும் முறை) செய்யப்படும்.
CELL: 416 999-2774
416 674-6622

BRICHMOUNT & ELLESMERE
3 BEDROOM HOUSE FOR RENT. WITH BSMT. AVAIL IMMEDIATELY.
RENT $1300 .00 + UTILITIES.
☎: 416-704-6951/416 288-9306

## SHARING ACCOMADATION

PARLIAMENT & WELLESLEY
BSVHLOR APT. FOR SHARE WITH LADY. CLOSE TO ALL FACILITIES.
PL. CALL: 416 413-9124
PL. LEAVE MESSAGE

## ROOM FOR RENT

MCCOWAN & HIGHGLEN
2 ROOMS FOR RENT. CAR PARKING. CLOSE TO TTC & ETC. AVAIL. JANUARY 01, 2002. தொடர்புகளுக்கு:
416 568-5245 / 416 457-7131

KENNEDY & ELLESMERE
சகல வசதிகளுடன் 2 அறைகள் தனித்தனியாக வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416 332-1463

MARKHAM & PROGRESS
1 LARGE MASTER BEDROOM FOR RENT & OTHER ROOMS FOR RENT WITH ALL FACILITIES. CLOSE TO HWY 401, CENTENNIAL COLLEGE
தொடர்புகளுக்கு: 416 431-7754

KIPLING & FINCH
3 அறைகள் கொண்ட CONDO. APT. இல் ஓர் அறை வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. AVAIL. JANUARY 01, 2002. CLOSE TO TTC, KIPLING MALL, HUMBER COLLEGE, YORK UNIVERSITY...
தொடர்புகளுக்கு - AFTER 6:00PM
CELL: 416 275-2102

PORTUNION & HWY 401
1 ROOM FOR RENT. PARKING. CLOSE TO TTC, HWY, SCARBOROUGH UNIVERSITY. AVAIL: JANUARY 01, 2002. LADIES PREFERRED
தொடர்புகளுக்கு: 416 287-2824

MCCOWAN & SHEPPARD
1 ROOM FOR RENT. STUDENT AVAIL WITH FOOD. CLOSE TO TTC, SCHOOL & COLLEGE
CONTACT: 416 291-1567
5:00PM - 9:00PM

MCCOWAN & EGLINTON
இரண்டு அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சாப்பாட்டுடன் வாடகைக்கு உளடு. பெண்கள் விரும்பத்தக்கது. CLOSE TO TTC, SCHOOL, MALL, ETC,
தொடர்புகளுக்கு: (416) 267-1580
(416) 816-8959

சகல வசதிகளுடன் கூடிய ஓர் அறை வாடகைக்கு உள்ளது.
DERRY & GORWAY (MISSISSAUGA)
DARCEL APT. (NEAR BY WEST WESTWOOD MALL) FOR RENT. CLOSE TO TTC & ETC. AVAIL JANUARY 01, 2002
தொடர்புகளுக்கு: (905) 672-6839

WARDEN & FINCH
1 BEDROOM FOR RENT. SEP. WASHROOM. WITH MEAL / WITHOUT MEAL. CLOSE TO TTC & ETC. AVAIL: IMMEDIATELY
தொடர்புகளுக்கு: 416 495-9775
416 505-7276

MIDDLEFIELD & DENISON
பகுதியில் அமைந்துள்ள வீட்டில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. CLOSE TO EVERYTHING.
தொடர்புகளுக்கு: (905) 201-8606

FINCH & MCCOWAN
3 அறைகள் கொண்ட வீட்டில் ஓர் அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. CLOSE TO ALL AMENITIES. AVAIL IMMEDIATELY.
தொடர்புகளுக்கு: 416 258-7809
AFTER 6:00PM

## விளையாட்டுத் தகவல்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கு இந்திய தீவுகளுடனும் சிம்பாவேயுடனும் மோதி வெற்றி ஈட்டியுள்ளது.2001ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவுக்கு மிகப் பெரிய வெற்றி ஆண்டாகும். இந்தப் பெரும் வெற்றி ஆண்டில் தமிழ் வீரன் முரளிதரனின் பங்கு அளவிடற்கரியது.

அடுத்து உதைபந்தாட்டத்தைப் பார்ப்போம். 2001ஆம் ஆண்டு முதன் முதலில் கனடாவின் சரித்திரத்தில் தெரிவு செய்யப்பட்ட *Toronto* தமிழ் வீரர்கள் அணி சுவிற்சலாந்து சென்று தமிழீழம் *World Cup*ஐ வெற்றி கொண்டது. இச்சுற்றுப் போட்டியில் ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், நெதர்லாந்து, பிரான்ஸ், சுவிற்சலாந்து ஆகிய நாட்டு தமிழ் அணிகள் பங்கு பற்றி இறுதியில் உதைபந்தாட்டத்திலும் கரப்பந்தாட்டத்திலும் கனேடிய (*Toronto*) அணிகளே வெற்றிக் கிண்ணங்களை தமதாக்கினர். இவ் வருடம் எமது இளைஞர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு உலக தமிழர் விளையாட்டுத் துறைப் பிரிவு எடுத்துக் கொண்ட சகல முயற்சிகளும் 2001ஆம் ஆண்டு முதல் தடவையாக வெற்றியாண்டாக மிளிர்ந்துள்ளது.

*2001 FIFA World Player of the year* விருதை இவ்வருடம் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த *Luis FIGO* பெற்றுக் கொண்டார். கடந்த வாரம் நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் வாக்குகள் மூலம் *Luis Figo* (போர்த்துக்கல்) முதலாம் இடத்தையும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த *David Beckham* இரண்டாம் இடத்தையும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த *Raul Gonzalez* மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். 2001ஆம் ஆண்டு பலத்த போட்டிகளின் பின்பு வாழ்வா சாவா என்ற நிலையில் இருந்த ஜேர்மனி, பிரேசில் ஆகிய இரு நாடுகளும் இறுதித் தருணத்தில் 2002ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் *World Cup* க்கு தேர்வு பெற்றுள்ளன. *Holland*, செக்கோசிலாவாக்கியா, யூகேஸ்லாவியா, கொலம்பியா, ரோமேனியா ஆகியவை *World Cup* க்கு இவ் வருடம் தெரிவாகவில்லை என்பது கவலைக்குரியதே. 2001 ஆண்டின் *FIFA World* தரப்படுத்தல் வரிசையில்

| | | |
|---|---|---|
| 1. பிரான்ஸ் | 2. ஆர்ஜென்ரினா | 3. பிரேசில் |
| 4. போர்த்துக்கல் | 5. கொலம்பியா | 6. இத்தாலி |
| 7. ஸ்பெயின் | 8. நெதர்லாந்து | 9. மெக்சிக்கோ |
| 10. இங்கிலாந்து | 11. ஜேர்மனி | என்று இடங்களை பெற்றுள்ளன. |

உலகத்திலே அதிக அளவு பணப்பரிசாக கொடுக்கப்படும் (*Boxing*) குத்துச் சண்டை விளையாட்டில் பல வருடங்களாக அதிபார குத்துச் சண்டை சம்பியன் ஆக இருந்த *Lennox Lewis* முதல் தரமாக *Rahman* இடம் தனது கிரீடத்தை கெடுத்தார். ஆனால் இதே வருடம் இறுதியில் மீண்டும் *Rahman* உடன் மோதி தனது *Champion Ship* யை மீண்டும் தக்க வைத்துள்ளார். கடந்த பல வருடங்களாக வெற்றீட்டிய *Lewis* 2001 ஆண்டு முதல் தரம் தனது *Belt* யை கோட்டை விட்டார்.

அடுத்து மிகவும் பிரபல்யம் பெற்ற *Tennis* விளையாட்டைப் பார்ப்போம். 2000ஆம் ஆண்டு முதல் இடத்தில் இருந்த *Pete Sampras*, 2001ஆம் இறுதியில் 10வது இடத்திற்கு சறுக்கியுள்ளார். 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற *Grand Slam* போட்டிகளின் விபரத்தை இங்கு பார்ப்போம்.

முதலாவதாக அவுஸ்திரேலிய *Open* போட்டிகளில் ஆண்கள் பகுதியில் *Andre AGassi* உம் பெண்கள் பகுதியில் *Tennifer Capriati* உம் வெற்றி ஈட்டினர். 11 வருடங்களின் பின்பு ஜெனியர் *Grand Slam* போட்டிகளில் மீண்டும் வெற்றியை பெற்றுள்ளார். அடுத்து *French Open* இல் ஆண்களில் பிரேசிலை சேர்ந்த *Gustavo Kuerten* உம் பெண்களில் *Jennifer Capriati* உம் வெற்றி பெற்றுள்ளனர். அடுத்து விம்பிள்டனில் *Goran Ivanisevic* க்கும் பெண்கள் பகுதியில் *Venus Williams* உம் பெற்றி பெற்றார்கள். அடுத்து *US Open* இல் *Lieyton Hewitt* ஆண்களிலும் பெண்கள் பகுதியில் ரெனிஸ் உலகில் ஒரு சரித்திர நிகழ்வாக முதன்முதலில் கறுப்பின சகோதரிகளான *Vennus, Serena Willams* சகோதரிகள் இறுதி போட்டியில் மோதி *Venus Willams, Us Open* இனை வெற்றி கொண்டார்.

அடுத்து இங்கு ரொரன்ரோ *Hockey* உம் *Basket Ball* உம் இந்தக் குளிர் நாட்டில் எமக்கு அடுத்த பொழுதுபோக்குக்கு ரசித்து வருகின்றோம். ஆனாலும் 2001 ஆண்டு *Maple Leafs* உம் *Rapators* எம்மை அதிக அளவு ஏமாற்றவில்லை என்றே கூற வேண்டும். *Hockey Team* ஆன *Maple Leafs* 2001 ஆண்டு மிகவும் திறமையாக விளையாடி *Play off* இலும் கணிசமான அளவு முன்னேறியது. ஆனால் அரை இறுதியாட்டங்களில் தோல்வியே கண்டது *Hockey* சரித்திரத்தில் *Montreal Canandians* க்கு அடுத்த படியே பல வெற்றிகளை குவித்து வந்த *Maple Leafs* 1967ஆம் ஆண்டில் இருந்து இன்னும் *Stanley Cup* யை கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2001ஆம் ஆண்டின் முன்னணியில் இருக்கும் *Maple Leafs* 2002 ஆண்டிலாவது *Stanley Cup*ஐ கைப்பற்றுமா எனப் பொறுத்திருந்து பார்ப்போம். அடுத்து *Basket Ball* 2001 ஆண்டு சகல அமெரிக்கர்களையும் தன்பக்கம் கவனத்தை திருப்பிய *Raptors* உம் *Vince Carter* உம் பெற்ற வெற்றிகள் அளப்பரியது. தொலைக்காட்சி கண்முடாமல் எம்மை இரசிக்க வைத்த *Raptrors* அடுத்த வருடம் 2002 இல் ஒரு படி மேலே போய் சிகரம் படைக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம். **நன்றி.**

**'புதுவருட நல்வாழ்த்துக்கள்'**


**SALE SALE SALE விற்பனைக்கு**

**DUNDAS & JARVIS** வீதியில் அமைந்துள்ள **VARIETY STORE** ஒன்று தளபாடங்கள், பொருட்களுடன் நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. விலை பேசித்தீர்க்கப்படும்.

தொடர்புகளுக்கு: 416 865-1264

**THE CHILDREN EDUCATION TRUST OF CANADA**

( CET )

சீலன். A (சிவா)

TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836

email: seelany2k@email.com



உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு **$400 இலவசம்**

**அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)**

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

**TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.**

இன்னும் பல சலுகைகள் உண்டு

**உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.**

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே


## திருக்குறளும் விளக்கமும்



**271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.**

ஒழுக்க சீலரைப் போல உலகத்தை ஏமாற்றும் வஞ்சகரைப் பார்த்து அவரது உடலில் கலந்துள்ள நிலம், நீர், தீ, காற்று, வெளி எனப்படும் பஞ்சபூதங்களும் தமக்குள் சிரித்துக் கொள்ளும்.

**272. வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்**
**தானறி குற்றப் படின்.**

தன் மனத்திற்குக் குற்றம் என்று தெரிந்தும்கூட அதைச் செய்பவர், துறவுக்கோலம் பூண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

**273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

மனத்தை அடக்க முடியாதவர் துறவுக்கோலம் பூணுவது, பசு ஒன்று புலித்தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்வது போன்றதாகும்.

**275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்**
**றேதம் பலவுந் தரும்.**

எத்தகைய செயல் புரிந்துவிட்டோம் என்று தமக்குத் தாமே வருந்த வேண்டிய துன்பம், பற்றுகளை விட்டு விட்டதாகப் பொய்கூறி, உலகை ஏமாற்றுவோர்க்கு வந்து சேரும்.


**CARRIER OPPORTUNITIES**

**LAUNCH AN EXCITING CAREER WITH ONE OF CANADA'S RESP LEADERS**

**BECOME A HERITAGE ENROLMENT OFFICER AND ENHANCE YOUR FUTURE AS WELL AS THE FUTURE OF CHILDREN.**

WE NEED SELF-MOTIVATED INDIVIDUAL DEDICATED TO HELPING PARENTS START REGISTERED EDUCATION SAVINGS PLANS (RESPS) FOR THEIR CHILDREN.

WE OFFER FLEXIBLE WORKING ARRANGEMENTS AND GROWTH OPPORTUNITIES WITHIN OUR NATIONAL, INDEPENDENT AGENCY NETWORK. **CONTACT ME.**

**TODAY FOR MORE EMPLOYMENT INFORMATION**

**MRS. D. RAJA** ☎: (416) 756-3409

Heritage
Scholarship Trust Plan

AIR CANADA
AIR FRANCE
KOREAN AIR
KLM
SINGAPORE AIRLINES
Lufthansa

# AIR LINK Travel Ltd.

**416-292-6200**

CANADA 3000
GULFAIR
CATHAY PACIFIC
Thai
Emirates
SriLankan Airlines

5200 Finch Ave.E. Scarborough (Finch & Middlefield) Fax: 292-7478

# SHIKA SERENDIB MARKET

நாளாந்த பாவனைக்குத் தேவையான சகல பொருட்களையும் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



**SHIKA SERENDIB MARKET**



TEL: (416) 261 - 2230
FAX: (416) 261 - 7835
2631 - 33 Eglinton Ave., East
Scarborough, Ont. M1K 2S2

உங்கள் அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்

# நியூ ராஜன் சலூன்

தரமான சொடுகு சம்பூவை இங்கு பெற்றுக் கொள்ளலாம்



பெண்களிற்கு ஏற்ப சிகையலங்காரம் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த பெண் நிபுணர்கள் மூலம் சேவை வழங்கப்படும்

**7 நாட்களும் சேவை வழங்கப்படும்**

ராஜா - Tel: 416 741-1049 pager 416 739 2393
5010 Steeles Ave. W., #19 (Kipling / Steeles)

JAB

# J.A.B. TRAVELS & TOURS

*Top Sales Award for Cathy pacific*

IATA
AIR TRANSPORT ASSOCIATION OF CANADA ATAC MEMBER

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
**J.A.B TRAVELS & TOURS.**

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ONT. ☎: (905) 896-8320
2390 Eglinton Ave. E., #211, Scarborough, Ont. ☎: (416) 759-3533

# JENNY AUTO SALES INC.

*(Kennedy & Steeles)*

## YEAR END SALE NOW



| | |
|---|---|
| * 2000 Toyota Sienna Black | $19900.00 |
| * 2000 Dodge Caravan Blue | $15900.00 |
| * 1999 Toyota Corolla VE | $10900.00 |
| * 1998 Toyota Camry CE | $12900.00 |
| * 1997 Acura 1.6 EL | $10900.00 |
| * 1997 Toyota Corolla SD | $ 8500.00 |
| * 1996 Dodge Caravan Only 62k | $ 7900.00 |
| * 1995 Dodge Neon 117k | $ 3900.00 |
| * 1992 Toyota Camry 4CGL | $ 6500.00 |
| * 1992 Toyota Corolla | $ 4300.00 |
| * 1992 Dodge Caravan Red 3.3L | $ 3900.00 |
| * 1991 Toyota Camry 6CGK | $ 3900.00 |
| * 1990 GMC Cargo Van | $ 3000.00 |

இதைவிட எம்மிடம் இன்னும் பல வாகனங்கள் உள்ளன.


Office: (905) 470-0048
Anton: (416) 435-4343
Indran: (416) 358-3130
*4440 Steeles Ave., East, Markham, Ont., L3R 0L4*

# JAFFNA SUPER STORE

உங்களுக்குத் தேவையான அனைத்து இலங்கை, இந்திய தானிய வகைகள், உடன் மரக்கறி வகைகள், இறைச்சி வகைகள், கடலுணவு வகைகள், மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



**TEL: (416) 289-8812**
ஜவ்னா சுப்பர் ஸ்ரோஸ்
1221 Markham Road, #14
(Markham/Ellesmere)
குவாலிற்றி பேக்கறிக்கு அருகாமையில்)




தமிழர் கலை, கலாச்சார, பாரம்பரிய பொருட்களுடன் ஆலய அபிஷேக பொருட்களை உங்கள் எண்ணம் போல் பெற்றிட மீண்டும் உங்கள் போராதரவுடன் தமிழர் மத்தியில்

மகாராஜாவின் பரிசுத்திட்டம்
மாதாமாதம் சிறப்புப் பரிசுகள்!
குடும்பமாகச் சென்று
பொருட்களைக் கொள்வனவு செய்து
... வென்றிடுவீர்,
... வீர்.

# மகாராஜாஸ்

**Retail & Wholesase**

மலிவு விலைகளில், சிறப்புத் தள்ளுபடி விலைகளில் சேலைகளும் பாவனைப் பொருட்களும்

**Centre View Square**
4465 Sheppard Ave. E., #8
☎: (416) 396-3458